மே - 2010

திருவள்ளுவர் ஆண்டு 2041

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 54
பகுதி : 7

விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

இருவகைத் துன்பங்கள்

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம் 606 206
கள்ளக்குறிச்சி வட்டம்
விழுப்புரம் மாவட்டம்
பேசி : 94432 85843

முதுமைக்கோல், மெய்சுருக்கம், மறதி, சாதல்
மூச்சுள்ள அனைவர்க்கும் இயற்கைத் துன்பம்
இதுபோன்ற துன்பத்தை நீக்கு தற்கோ
இம்மண்ணில் ஓருவழியும் இல்லை. ஆனால்
மது, சூது, சினமாசை, களவு, பொய்கள்,
மானிடரை அழித்துவிடும் செயற்கைத் துன்பம்.
ஓதுக்கிவிட இயலுகின்ற இத்துன் பத்தை
ஒழித்துவிட இங்குபல வழிகள் உண்டு.

மாறுபட்ட உடலமைப்பால் மலர்வாள் ஓரோர்
மாதத்தீ லும்துடிப்பாள். இயற்கைத் துன்பம்.
ஆருயிரை வயிற்றில்முந் நூறு நாட்கள்
அடைகாப்பாள். சுமந்திடுவாள். இயற்கைத் துன்பம்.
பேறுகால வலிபொறுப்பாள். குருதிப் பாலை
பிள்ளைகட்குக் கொடுத்திடுவாள். இயற்கைத் துன்பம்.
வேறுவழி உய்வதற்கே இல்லாத் துன்பம்
விளையும்போ தாறுதலை அவட்குச் சொல்வோம்.

இடுகாட்டில் பிணந்தீயில் எரிவ தேபோல்
எரிந்திடுவாள். சமைத்திடுவாள். செயற்கைத் துன்பம்.
குடும்பத்து வேலையெல்லாம் முடிப்பாள். வீழ்வாள்.
கொத்தடிமைப் போலழுவாள். செயற்கைத் துன்பம்.
படுப்பதுபின் எழுவதுமுன் என்ற ழைத்தும்
பசித்தீயில் குளித்திடுவாள். செயற்கைத் துன்பம்
அடுக்கிவரும் அவள்செயற்கைத் துன்பம் போக்கி
அன்பின்பம் சேர்த்தவளை வாழ வைப்போம்.

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 54

பகுதி : 7

[redacted] மே 2010

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2041

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

பெரிய புராணம் 4

முனைவர் இரா. செல்வக்கணபதி

வித்துவசிரோமணி
கணேசையரின் உரைவன்மை 12

ஸ்ரீ பிரசாந்தன்

'அய்யன் திருவள்ளுவர்'
தொடர் சரியா? 18

தமிழாகரர் தெ. முருக[illegible]

மனோன்மணீயம் நாடகத்தில் திருவாசகச்
சொல்லாட்சியும் கருத்தாளுகையும் 22

[redacted]. சங்கீத்ராதா

உலக மானுடக் கவிஞர் பாரதிதாசன் 28

முனைவர் இ.கி. இராமசாமி

கச்சியப்பரின் கவிநயம் 32

பேரா.முனைவர் சரசுவதி இராமநாதன்

இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

வழக்கம் போல் தமிழ் சார்ந்த சீரிய சிந்தனையுடன் வெளிவருகிறது இம்மாத இதழ். இவ்விதழில் உள்ள ஆறு கட்டுரைகளும் தன்னளவில் தமிழ் ஆராய்ச்சிற்குச் சிறந்த பங்களிப்பைச் செய்யக் கூடியவை. பெரியபுராணம் தோன்றிய சமூகப் பின்னணியையும், அதன் சிறப்பையும், காப்பிய அமைப்பையும் விளக்குகிறது முனைவர் இரா. செல்வகணபதியின் 'பெரியபுராணம்' கட்டுரை. பழந்தமிழ் இலக்கியங்களை அனைத்துதரப்பினருக்கும் புரியும் வகையில் கொண்டு சென்றவர்கள் உரையாசிரியர்கள். அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் பிறந்து 'இரகுவம்சம்' முதலிய நூல்களுக்கு உரை எழுதிய வித்துவசிரோன்மணி கணேசையரின் உரைவன்மையைப் பேசுகிறது 'வித்துவசிரோன்மணி கணேசையரின் உரைவலிமை' என்ற கட்டுரை.

'அய்யன் திருவள்ளுவர்' என்ற தொடரை முன்வைத்து எழுப்பப்படுகின்ற இலக்கணம் சார்ந்த ஐயங்களுக்கு பதிலுரைக்கிறது 'அய்யன் திருவள்ளுவர்' தொடர் சரியா? என்ற கட்டுரை. பெ. சுந்தரம்பிள்ளைக்கு திருவாசகத்தின் மீதிருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது என்.எஸ்.கே. சங்கீத்ராதாவின் கட்டுரை. புரட்சிக் கவிஞரின் தமிழ், தமிழினம் சார்ந்த சிந்தனைகளை நுட்பமாக மதிப்பிடுகிறார் முனைவர் இ.கி. இராமசாமி. முருகனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெருமையுடையது கந்தபுராணம். பரவலான வாசகர் கவனத்தைப் பெறாத இந்நூலின் இலக்கியச் சுவையினை வெளிப்படுத்துகிறார் முனைவர் சரசுவதி இராமநாதன். தமிழார்வலர்கள் இக்கட்டுரைகளைப் படித்து இன்புறுவார்கள் என்று நம்புகிறோம்.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

பெரிய புராணம்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

மாக் கதை

சேக்கிழாரின் பெரியபுராணம், தமிழில் எழுந்த பெருங் காப்பியங்களுள் ஒன்று. 'உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தல்' என்ற வகையில் எழுந்த வரலாற்றுப் பெருநூல் இது. இந்நூல், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதினொரு பாடல்களால் இயன்ற, திருத்தொண்டத்தொகை என்ற நூலைப் பதிகமாகக் கொண்டும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத் தொண்டர் திருவந்தாதியை வகை நூலாகக் கொண்டும், சேக்கிழாரால் விரிநூலாகப் பாடப்பெற்றுள்ளது. சேக்கிழார் இந்நூலுள் எடுக்கும் மாக் கதை என்ற தொடரை ஆண்டுள்ளார். மாக் கதை என்பதே 'பெரிய கதை' எனப் பொருள்பட்டு, பிற்காலத்தே 'பெரிய புராணம்' என வழங்கலாயிற்று என்றும் கூறுவர். செயற்கரிய செயல் செய்வாரைப் 'பெரியர்' என்று திருவள்ளுவர் குறிப்பர். நாயன்மார் பலரும், செயற்கரிய செயல் செய்த பெரியராதலான், இந்நூல் 'பெரியர் புராணம்' எனப் போற்றப்பெற்றுப் பின்னர்ப் 'பெரிய புராணம்' எனத் திரிந்தது என்பாரும் உளர்.

பின்புலங்கள்

சேக்கிழாரின் பெரியபுராணம் தோன்றுவதற்குப் பின்புலமாக அமைந்த, அக்காலச் சமூகம் மற்றும் சமயச் சூழல்களை ஆராய்ந்து தெளிவது, பெரிதும் நலம்பயக்கும். திருத்தொண்டர் புராண வரலாற்றில், அக்காலச் சோழ மன்னனும், மக்களும், சீவகசிந்தாமணியின் மேல், பெரு விருப்பம் கொண்டிருந்தமையை மாற்றவே, சேக்கிழார் பெரியபுராணம் பாட நேர்ந்தது என்ற குறிப்புக் காணப்படுவது முன்னரே சுட்டப்பெற்றது. வளமும், அமைதியும் நிறைந்த நாடுகளுள், மக்கள், கேளிக்கை நாட்டம் கொண்டு வாழ்வர் என்பது பொதுவான ஒரு மதிப்பீடு. பழையாறையில் ஒடுங்கிக் கிடந்த சோழர்கள், விஜயாலயன் நிகழ்த்திய திருப்புறம்பயப் பெரும்போருக்குப் பின், மீண்டும் தலை எடுத்தனர். நானூறு ஆண்டுக்காலம் பிற்காலச் சோழர் ஆட்சி நிலை கொண்டது. காவிரி தந்த வளனும், சோழர் தந்த பாதுகாவலும் காரணங்களாக, மொழி, சமயம்,

கலைகள் யாவும் வளர்ந்தன. கவலைகள் இல்லாத சோழநாட்டுச் சமுதாய வாழ்வில், மக்கள் கேளிக்கை நாட்டம் கொண்டு, சமணநூல் என்றும் பாராது, சீவகசிந்தாமணியின் சிருங்காரச் சுவையில் திளைத்திருக்கலாம் என்பது ஏற்கத்தக்கதே ஆகும்.

ஆடவர் ஒழுக்கம்

சமண சயமநூல் என்பதற்காக மட்டுமல்லாமல், சிவாலயங்கள் பல எழுந்தும், திருமுறைகள் பல தோன்றியும், தம் நாட்டு மக்கள், சீவக சிந்தாமணியின் சிருங்கார ரசத்தில் திளைத்து, பக்தி நெறி மறந்தமையின், அவர்களைச் சைவநெறியில் திருப்ப வேண்டும் என்ற எண்ணமும், சேக்கிழாருக்கு இருந்திருத்தல் கூடும். சிலப்பதிகாரம், பெரிய புராணம் முதலிய ஒன்று இரண்டு நூல்களைத் தவிர, தமிழில் எழுந்த பெருங்காப்பியங்கள் பலவும், கதைக் கருவைத் தமிழ் மண்ணில் தேர்ந்துகொள்ளாமல், நடையிட்டதற்குக் காரணம், நன்கு ஆராயப்பட வேண்டும். சமூக ஒழுங்கை விரும்பிய தமிழ்ப் பெருங்கவிஞர்களுக்கு, நெறி திறம்பிய, ஆடவர் வாழ்வைக் கதைக் கருவாகத் தேர்ந்துகொள்ள விருப்பம் இல்லாது இருக்கலாம்.

மனிதகுல ஒருமை

சோழ நாட்டில், காவல் மிக்க நல்லாட்சியும், வளமும் இணைந்திருந்தும், தொழில்வழி வந்த சாதியம், சமூக நல்லிணக்கத்திற்குத் தடையாக நின்றது. உறவு, சாதி, மொழி என்பனவற்றிற்கெல்லாம் மேலாக மனித குலத்தைப் பேதமில்லாது, ஒரு வட்டத்துக்குள் கொண்டு வருவதற்குச் சமயம் பெரிதும் துணை செய்யவல்லது என்ற சேக்கிழாரின் நல்லெண்ணம்கூடப் பெரிய புராணத் தோற்றத்திற்கு, ஒரு காரணமாக இருந்திருக்கலாம். தேவார ஆசிரியர்கள் வாழ்விலும், சாதியக் கட்டுக்களைத் தகர்க்கும் பல கூறுகள் அமைந்து கிடந்தமை, சேக்கிழாரைச் சிந்திக்க வைத்திருக்கலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின், திருத்தொண்டத் தொகைப் பதிவுகள், இடம் பெற்றிருந்த நாயன்மார் குல மரபுகள், சிவன் சந்நிதியில் மனித குலத்தை ஒருங்கிணைக்க இக்கதை உதவும் என்ற நம்பிக்கையைச் சேக்கிழாருக்குத் தந்திருக்கலாம். சேக்கிழார், இத்தடத்தில் பதித்த அழிக்க ஒண்ணாத முத்திரைகள் பல. அவை பின்னர்விரிவாக இந்நூலுள் விளக்கப்படவுள்ளன.

வரலாற்று ஆய்வு

மூன்றாவதாகப் பெரியபுராணம் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் தோற்றம் கொண்டதற்கு உரிய வேறு ஒரு காரணமும் உண்டு. தமிழில் சங்க இலக்கியங்கள் பலவும், மனிதனை மையப்படுத்தி, மானுடத்தைக் கருவாகக் கொண்டே எழுந்தன. இறையவர்கள், சங்க நூல்களில், பாட்டுடைத் தலைவர்களின் அருளையும் ஆற்றலையும் விளக்க, உவமையாகவே முன்னிறுத்தப்பட்டனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சமய எழுச்சிக்காலம் பிறந்தது. அதுமுதல், சேக்கிழார் வாழ்ந்த கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை, ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள், தமிழ்க் கவிதைகளிலிருந்து, மானுடம் அகற்றப்பட்டு, இறையவர்கள் முன்னிறுத்தப்பட்டனர்.

காதலால் விளைந்த கதை

தென் தமிழ்நாடு செய்த தவப்பயனால், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அவதரித்தனர். சமணத்தை வீழ்த்தி, சைவத்திற்குப் புதுவாழ்வு தந்தனர். தமிழ் மொழி தளிர்த்தது. தமிழ்க் கலைகளாகிய இசையும் கூத்தும் மீண்டும் தலை எடுத்தன. சைவசமயம் முடிசூடிக் கொண்டது. இத்தனை இருந்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திரு அவதாரத்திற்கான காதலைச் சொல்லவந்த சேக்கிழார், மாதவம் செய்த தென் திசை வாழவும், தீதில்லாத அடியவர் வரலாறு கூறும் திருத்தொண்டத் தொகை, தமிழ் மண்ணில் பிறக்கவுமே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காதல் அரும்பிற்று என்ற அழகிய பதிவு ஒன்றைத் திருமலைச் சருக்கத்தில் பதிவு செய்கிறார். மேற்குறித்த தொடர்கள், சைவ சமய வரலாற்றில் நன்கு உற்று நோக்கி ஆராயப்பட வேண்டுவன.

சிவனார் திருவுள்ளம்

ஆண்டவன் அருளும் புகழும் பாடுவதிலும் மேலாக, அவன் பெயரால் சிற்றுயிர்களுக்கும் மனித குலத்திற்கும் அருந்தொண்டாற்றிய மாமனிதர்கள் போற்றப்பெற வேண்டும் என்பதே சேக்கிழாரின் பெருவிருப்பம் என்பது உறுதியாகிறது. சமூக நலம் கலவாத சமய வாழ்வைச் சேக்கிழார் பெரிதாகப் போற்றவில்லை. சிவனார் திருவுள்ளம் கூடத் தம்மைப் பாடுவதிலும், தம் அடியார்களைப் பாடுவதிலேயே மகிழ்ந்தது என்பதைப் பெரிய புராணத் தோற்ற வரலாறு காட்டுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முதன்முறை 'பித்தா' என்றும், இரண்டாம் முறை அடியவர் புகழ் தொகுக்கத் 'தில்லை வாழ் அந்தணர்' என்றும் அடி

எடுத்துக் கொடுத்ததோடு, சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என அசரீரி பிறப்பித்ததும் கூர்ந்து நோக்கத்தக்கன.

மானுடத்திற்கு முதன்மை

எனவே, அளவற்ற பத்திமையில் தலைநின்று, சடங்குச் சமயம் நிலைகொண்டு எழுவதைச் சேக்கிழார் உணர்ந்திருக்க வேண்டும். மனிதர்களும் மனிதமுயற்சிகளும் அவர்தம் பேராற்றல்களும், உலகவர்முன் நிறுத்தப்பட வேண்டும். ஆண்டவன் நிகழ்த்திய அற்புதங்கள் கேட்டு அதிசயித்து, அந்நியப்பட்டு நிற்பவர்களைத் தன் ஒத்த மனிதன் ஒருவன் நிகழ்த்திய அற்புதங்களைச் சுட்டுவதன் மூலம், அவர்களோடு இணைந்து, நடையிட வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக மாற்றச் சேக்கிழார் உளம் கொண்டிருத்தல் வேண்டும்.

மூன்று காரணங்கள்

மேற்குறித்தவற்றை உற்று நோக்கினால், சேக்கிழாரின் பெரிய புராணம் தோற்றம் கொண்டதற்கான சமூக-சமயத் தாக்கங்களை இனங்காண முடியும். நெறி திறம்பிய ஆடவர் வாழ்வை நேர்படுத்தி, ஒழுக்கம் மிக்க சமய வாழ்விற்கு அவர்களை மடைமாற்றுவது ஒன்று. இரண்டாவது, மனித குலத்தைச் சாதியக் கட்டுக்களிலிருந்து விடுவித்து, ஓர் இறைவன் பெயரால் ஒருங்கிணைப்பது. மூன்றாவது, கவிதைகளில் மட்டுமல்லாது, சமூகத்திலும் இறைவனுக்கு இணையாக, சற்று மேலாக, மனிதத்தை முன்னிறுத்தி, மக்களைத் தொண்டு நெறிக்கு அழைத்துச் செல்வது. இவை காரணங்களாகவே இறைவனும் மனிதர்களும் இணைந்து நடையிடும் தம் காப்பியத்திற்கு, இறைவன் பெயரை முன்னிறுத்தாது, திருத்தொண்டர் புராணம் என மானுடத்தை முன்னிறுத்திச் சேக்கிழார் பெயர் சூட்டியிருக்க வேண்டும் என்பதை உணர முடிகிறது.

திருத்தொண்டத் தொகை

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணக் காப்பியக் கட்டமைப்பை சிறிது காணலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி என்பன திருத்தொண்டர் புராணம் பாட உந்துதலாக அமைந்தமை முன்னரே குறிக்கப்பட்டது. திருத்தொண்டத்தொகை பதினொரு பாடல்களால்

இயன்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவர் வாழ்ந்த கி.பி. எட்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்பாக வாழ்ந்திருந்த சிவத் தொண்டர்களின் செய்திகளை அரிதின் முயன்று திரட்டித் தம் திருத்தொண்டத் தொகையில் பதிவு செய்துள்ளார். ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளில் வாழ்ந்திருந்த சிவநெறிச் செல்வர்களை, ஒருசேரப் பதிவு செய்ததன் வழி, தமிழக வரலாற்றில், வரலாற்றுக் கண்ணோட்டத்திற்கு முதல் முயற்சி மேற்கொண்ட பெருமை, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அமைகிறது. தனித்தொண்டு ஆற்றியவர்களை மட்டும் திரட்டாது, ஒன்பது குழுவினரையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிவு செய்துள்ளார். முன்னவர்கள் 'தனி அடியார்கள்' என்றும், பின்னவர்கள் 'தொகை அடியார்கள், என்றும் குறிக்கப்பெற்றனர்.

பாராட்டுரைகள்

சைவ இலக்கிய வரலாற்றில், பெரும் திருப்பத்தை விளைவித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், அவர் வடித்தளித்த திருத்தொண்டத் தொகையையும், அருமை உணர்ந்த பின்வந்தோர் பெரிதெடுத்துப் போற்றியுள்ளனர். சேக்கிழார், தம் நூலின் மும்மையால் உலகாண்ட சருக்கத்தின் நிறைவில்,

''நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல் வணங்க வந்தபிறப்பை வணங்குவாம்''

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை நெஞ்சார வணங்கி மகிழ்கிறார். இவ்வாறே, தம் நூலுள் சேக்கிழார், இம்முதல், தமிழ் வரலாற்றுப் பதிவை நெஞ்சாரப் போற்றி,

'தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத்தொகை''

என்றும்,

''தீதிலாத் திருத் தொண்டத் தொகை''

என்றும்,

''புற்றிடத்து எம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த் திருத் தொண்டத் தொகை''

என்றும்,

"மூலமான திருத்தொண்டத் தொகை"
என்றும் பலவகையில் ஏற்றுப் போற்றுவதைக் காணமுடிகிறது.

திருத்தொண்டர் திருவந்தாதி

ஒன்றிரண்டு நாயன்மார்களைத் தவிர, ஏனை நாயன்மார் வரலாறுகள் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் மிகச் சுருக்கமாகவே திருத்தொண்டத் தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு, சரியான வரலாற்றை அறிதல் மிகவும் கடினம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சின்னஞ்சிறு பதிவுகளுக்குத் தம் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலால் ஒளியூட்டியவர் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்திருந்த, நம்பியாண்டார் நம்பிகள். தம் நூலுள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேரமான் பெருமாள், கோச்செங்கட் சோழர் என்பவர்களுக்கு மட்டும் தலா இரண்டிரண்டு பாடல்களால் வரலாறு வகுக்கிறார். எஞ்சியோர் வரலாறுகள் ஒவ்வோர் பாடலால் விரிக்கப்பட்டுள்ளன. சுந்தரர் வரலாறு மட்டும், பதினொரு பாடல்களால் இடையிடையே விரிக்கப்பட்டு உள்ளது. வேறு சில செய்திகளையும் பேசி, இந்நூல் எண்பத் தொன்பது கட்டளைக் கலித்துறைகளால் நிறைவு பெறுகிறது.

புகழுரைகள்

வரலாற்றுத் தேடலில் கள ஆய்வு மேற்கொண்டு, திருத்தொண்டத் தொகைக்கு ஒளியூட்டிய நம்பியாண்டார் நம்பிகளைத் திருத்தொண்டர் திருவந்தாதியின் இறுதியில் காணப்படும் தனிப்பாடல் ஒன்று, திறம் தெரிந்து போற்றுகின்றது.

"பொன்னி வடகரை சேர்நாரையூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதி, தேம், மரபு, செயல்
பன்ன அத்தொண்டத் தொகை வகை பல்கும் அந்தாதி தன்னைச்
சொன்ன மறைக்குல நம்பி பொற்பாதம் துணை துணையே"

சேக்கிழார்

"அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி
புந்தியாரப் புகன்ற வகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம்"

என்று மனவணக்கம் செய்து, நூல் விரிக்கிறார். என்றாலும், முற்றிலுமாக நம்பியாண்டார் விரிக்கும் வரலாறுகளை ஏற்றுப் போற்றாது, சில வரலாறுகளில், அவரோடு முரண்படவும் செய்கிறார். என்றாலும், நம்பியாண்டார் நம்பிகள் முயற்சி உன்னதமானது என்பதில் ஐயமில்லை.

காப்பிய உருவாக்கம்

சேக்கிழாரின் பெரியபுராணம் மேற்குறித்த இரண்டு நூல்களின் விரிநூலாக - ஒரு பெருங்காப்பியமாக மலர்ந்தது. அக்காலத்தில், கதை நிகழ்த்துவதற்கு உரிய யாப்பாக விருத்தப்பாக்கள் கண்டு தெளியப்பட்டிருந்தன. சேக்கிழாருக்கும் பெரிதும் இவ் யாப்புப் பயன்பட்டது. தம் பெருங்காப்பியத்தை இரண்டு பெருங் காண்டங்களாகப் பகுத்துக்கொண்டார். திருத்தொண்டத் தொகையின் பதினொரு பாடல்களின் தொடக்கங்களை உள்வைத்துச் சருக்கங்களுக்குப் பெயராகச் சூட்டினார். தனியே, முதற்கண் கதை நடத்த ஏதுவாகத் திருமலைச் சருக்கம் ஒன்றையும் - பதின்மூன்றாவதாகக் கதை முடிக்க, வெள்ளானைச் சருக்கம் ஒன்றையும் இணைத்துக் கொண்டு, சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை நிறைவித்தார். நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு பாடல்களால் நூல் நிறைவு பெற்றது. விருத்தப்பாக்களோடு, தரவு கொச்சகக் கலிப்பா, கலிநிலைத்துறை, கலி விருத்தம், வஞ்சி விருத்தம் முதலிய யாப்புக்களும் சேக்கிழாரால் ஏற்றுப் போற்றப்பெற்றன.

பாதுகாவல் உணர்வு

திருத்தொண்டத் தொகை குறித்த, தனியடியார் அறுபதின்மரோடு, அன்னார் வரலாற்றைப் பதிவு செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், அவர்தம் பெற்றோர் இருவரையும் இணைத்து, தனியடியார் தொகையை, அறுபத்து மூன்றாகச் சேக்கிழார் உயர்த்திக் கொண்டார். சுந்தரமூர்த்திகளின் வரையறையைத் தமக்குப் பாதுகாவலாகக் கொண்ட சேக்கிழார், தம் காலத்துக்கு முற்பட்டவராக வாழ்ந்திருந்த மாணிக்கவாசகர் முதலியோர் வரலாற்றைப் பாடாது விடுத்தார்.

காப்பியக் கட்டமைப்பு

தமிழ்ப் பெருங்காப்பியம் ஒன்றை முன்னிறுத்தித் தமிழில் எவரும் காப்பிய இலக்கணம் படைத்திருக்கவில்லை. வட மொழியிலிருந்து, தண்டி முதலியோர் படைத்த காப்பிய இலக்கணம், தமிழிலும்

நிலவியிருந்தது. தன்னேரிலாத தலைவன் ஒருவன், பெருங்காப்பியத்திற்கு வேண்டும். பல அங்கங்கள் பாடப் பெற வேண்டும். 'அறுபத்து மூன்று சிறுகதைகளின் தொகுப்புப் போல் தோன்றாமல், பெரிய புராணத்தை ஒரு காப்பியக் கட்டமைப்புக்குள் கொண்டுவந்த சேக்கிழாரின் புலமைத் திறம் வியப்பைத் தருகிறது. திருத்தொண்டத் தொகை வழங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காப்பியத் தலைவராக முன்னிறுத்தி, அவர் வரலாறு புனையும் நோக்கில், அவரால் போற்றி வணங்கப் பெற்ற அடியவர் வரலாறுகளைச் சுவை குன்றாது நிரலே புனைந்து, நடுவிலும், நிறைவிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறே நாட்டுக் காப்பியம் நிறைவித்திருப்பது தமிழ்க் காப்பிய உலகிற்கு முதலாகவும் அதுவே இறுதியாகவும் நிற்கிறது. சேக்கிழாரின் பெரிய புராணம், கடந்த எண்ணூறு ஆண்டுகளில் தமிழ்மொழி, தமிழக்கலைகள், தமிழர் சமயமாம் சைவம், தமிழ்ச் சமுதாயம் முதலியவற்றின்மேல் பதித்த அடிச்சுவடுகளும் விளைத்த மாற்றங்களும் அடுத்து வரும் பகுதிகளில் விரிவாக விளக்கப்படவுள்ளன.

பதிப்புக்கள்

பெரிய புராண வருகையைத் தொடர்ந்து நாயன்மார் சிறப்பு உரைக்கும் கவிதை நூல்களும், உரைநடை நூல்களும், ஆராய்ச்சி நூல்களும் தமிழில் பலவாகத் தோன்றின. சேக்கிழாரின் பெரிய புராணத்திற்குச் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம், திருப்பனந்தாள் காசி மடம், சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் முதலியன நல்ல மூல நூல் பதிப்புக்களை வெளிக் கொண்டுவந்தன. நாவலர் பதிப்பையே புதிய பதிப்பாகக் கோலாலம்பூர்ச் சைவ சிந்தாந்த நிலையம் அழகுற வெளியிட்டுள்ளது. சிவக் கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் மிக விரிவான முறையில் உரை கண்டு பல தொகுதிகளாக வெளியிட்டார். அமரர் திரு. அ.ச. ஞானசம்பந்தன் பெரிய புராணத்தைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து பல நூல்களை வெளியிட்டார். ஈழப்பகுதியில் பெரிய புராணம் பெரிதும் நிலைகொள்ளத் தவத்திரு. ஆறுமுக நாவலர் எழுதிய பெரிய புராண சூசனம் துணை நின்றது. அவற்றின் திறம் விரிக்கின் பெருகும்.

வித்துவசிரோமணி கணேசையரின் உரைவன்மை

இரகுவமிச உரையை முன்வைத்து ஒரு நோக்கு

ஸ்ரீ பிரசாந்தன்
முனைவர்ப் பட்ட ஆய்வாளர்
தமிழியில் துறை
அண்ணாமலைப பல்கலைககழகம

முன்னுரை

'வித்துவசிரோமணி' சி. கணேசையர் ஈழத்து யாழ்ப்பாணத்தில் 1878ஆம் ஆண்டிற் பிறந்து, 80 ஆண்டுகள் வாழ்ந்தவர். அவரது வாழ்வின் நிறைவுப் பத்தாண்டு காலப்பகுதி நீங்கலாக ஏனைய பெரும்பகுதியானது ஆங்கிலேயர்களின் காலனித்துவ ஆட்சிக்கு இலங்கை உட்பட்டிருந்த வேளையிற் கழிந்தது. அரசுப் பணி கருதிய வாழ்க்கையும், இது தொடர்பில் ஆங்கிலக் கல்வியும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுவந்த காலப்பகுதியில், ஒரு மரபுத் தமிழறிஞராகவே வாழ்ந்து நிறைந்தவர் கணேசையர். வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் போன்ற பேரறிஞர்களிடம் பாடங்கேட்ட கணேசையர், தாமும் புகழ் பெற்ற ஆசிரியராக விளங்கி, நன் மாணாக்கர் பலரைத் தமிழ் உலகிற்குத் தந்தவர். பதிப்பாசிரியராக, கட்டுரையாசிரியராக, புராணபடன உரைகாரராகவெல்லாம் விளங்கிய இவர், சிறந்த உரையாசிரியராகவும் தொழிற்பட்டவர். இவரின் உரைவன்மையை, இக்கட்டுரை, இரகுவமிச உரையை முன்வைத்து ஆராய்கின்றது.

கணேசையரின் உரை முயற்சிகள்

மொழி வழக்கில் காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதனால், பழந்தமிழ் நூல்களைப் பிற்காலத்தினர் உள்ளவாறு உணர்ந்து கொள்வதில் சிக்கல்கள் உள என்பது புரிந்து கொள்ளக்கூடியதே. இதனால், இப் பழைய நூல்களுக்குக் காலத்துக்குக் காலம் உரைநூல்கள் தோற்றம் பெற்ற வண்ணமே உள்ளன. தற்கால சராசரி வாசகனொருவன் இவ்வுரை நூல்களின் துணையின்றி, மூலத்தைச் சரிவரப் புரிந்துகொள்வது சிரமமானதே. எனவே, மரபுத் தமிழறிஞர்கள் பலரும், தமது தமிழியற் பணிகளுள் ஒன்றாக, உரை முயற்சியையும்

ஆற்றிவந்துள்ளனர். இவ்வகையில், ஆறுமுக நாவலர், குமாரசுவாமிப்புலவர், ஞானப்பிரகாசர், திருவிளங்கம், ம.க. வேற்பிள்ளை போன்ற ஈழத்துத் தமிழறிஞர்கள் பலரும், நீதிநூல்கள், சிவஞானசித்தியார், கந்தரலங்காரம், திருவாதவூரடிகள் புராணம் முதலிய பல நூல்களுக்கும் உரைகளை எழுதி வெளிப்படுத்தியுள்ளனர்.

இவர்கள் வழியில் கணேசையரும் சில நூல்களுக்கு உரைகண்டிருப்பதனைக் காணலாம். கணேசையரின் உரைப்பணியை இரண்டு வகையாகச் சுட்டுதல் பொருத்தமுடையதாகும். ஒன்று, அவர் வெளியிட்ட தொல்காப்பியப் பதிப்புகளில் அவர் வரைந்துள்ள உரைவிளக்கக் குறிப்புகள். தாம் பதிப்பித்த தொல்காப்பியப் பதிப்புகளில் உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர் ஆகியோர்களுடைய உரைப்பகுதிகளிற் கூட, இருபதாம் நூற்றாண்டு வாசகர்களுக்குப் புரிதற்கு அரிய விடயங்கள் இருக்குமெனக் கருதிய கணேசையர், அவ்விடங்களுக்கு விளக்கக் குறிப்புகளை அடிக்குறிப்புகளாகத் தந்துள்ளார். இவ் விளக்கக்குறிப்புகளிலும் கணேசையரின் உரைவன்மையைக் கண்டுகொள்ள முடிகின்றது.

இரண்டாவது, இரகுவமிசம் முதலான சில நூல்களுக்குக் கணேசையர் வரைந்துள்ள உரைகள் பொழிப்புரையாகவும், விளக்கவுரையாகவும் இவர் உரை வரைந்துள்ள நூற்பட்டியல் பின்வருமாறு :

அ. இரகுவமிசம்

ஆ. அகநானூறு - களிற்றுயானை நிரை

இ. மகாபாரதம் - சூது போர்ச் சருக்கம்

ஈ. ஒருதுறைக் கோவை

உ. மேகதூதக் காரிகை

இவ்வுரை நூல்களுள், இரகுவமிச காவியத்துக்கான கணேசையரின் உரையினது வன்மை இங்கு நோக்கப் பெறுகிறது.

இரகுவமிச உரை

ஆரியச் சக்கரவர்த்திகளது வமிசத்தைச் சார்ந்தவரான அரசகேசரி, வடமொழி இரகுவம்சத்தைத் தழுவி, தமிழிலே 'இரகுவமிசம்' எனும் காவியத்தை இயற்றினார். இக்காவியமானது, யாழ்ப்பாணத்திலே பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கிய

மரபுத் தமிழ்க் குருகுலங்களில் முக்கியமானதொரு பாடநூலாக விளங்கியிருந்துள்ளது. இக்காவியத்துக்கான உரை வாய்மொழியாக மாணவர்களுக்குச் சொல்லப்பெற்று வந்துள்ளது. முதன் முதலில் உரையெழுதி வெளியிட்ட பெருமை கணேசையருக்கே உரியது. இவ்வாறு வெளியிடுவதற்கான ஊக்கம் இவர்தம் ஆசிரியர்கள் வாயிலாக இவருக்குக் கிடைத்திருக்குமென எதிர்பார்க்கலாம். ஏனெனில், ஏட்டுச் சுவடிகளிலிருந்து இரகுவமிசத்தை முதன் முதலிலே பதிப்பித்தளித்தவர் கணேசையரின் ஆசிரியரும் ஆறுமுகநாவலரின் மருகருமான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களே. மேலும், கணேசையரின் மற்றோர் ஆசிரியரான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், இக்காவியத்தில் பெரிதும் ஈடுபட்டு, 'இரகுவமிச சரிதாமிர்தம்' எனும் நூலைத் தந்தவர். இவ்வாறு ஆசிரியர்கள் இரகுவமிசத்தின் மீது காட்டிய ஈடுபாடு, கணேசையரை உரைகாணுமாறு செய்தது எனலாம்.

இரகுவமிசத்தின் முதற்காண்டத்துக்கு மட்டுமே கணேசையரால் உரை காணப்பெற்றது. ஏனையிரு காண்டங்களுக்குமான உரைமுயற்சி நிறைவாகும் முன்னரே இவரின் வாழ்வு நிறைந்துவிட்டது. எனினும், இரகுவமிசத்துக்கு உரை காணுதலானது எத்துணை தூரம் சவாலானது என்பது, இன்றுவரை அவரால் உரைகாணப்பெறாத இரு காண்டங்களுக்கும் உரை தோன்றாமல் உள்ளமை ஒன்றாலேயே புலனாகக் கூடியதாகவுள்ளது. எனவே, கற்றோர்க்கன்றி மற்றோர்க்குப் புரிதற்கு அரிதானதாகவுள்ள இரகுவமிச காவியத்தின் ஒரு காண்டத்துக்குக் கணேசையர் ஆற்றிய உரைப்பணியானது, தமிழ் உரை வரலாற்றிலே என்றும் சிறப்பாக நினையத்தக்கதொரு பணியாக விளங்குகின்றது.

இரகுவமிசத்தின் பொதுக்காண்டத்து முதல் ஏழு படலங்களுக்குமான கணேசையரது உரை, 1915 இல் வெளிவந்தது. இந்நூலில், பாயிரம், ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம், அரசியற்படலம், குறைகூறு படலம், தேனுவந்தனப் படலம், இரகு உற்பத்திப் படலம், யாகப் படலம், திக்குவிசயப் படலம் ஆகிய பகுதிகளுக்கான உரை அமைந்துள்ளது. 1932 இல் வெளியான இரண்டாவது பகுதியில், அயனுதயப் படலம், அயனெழுச்சிப் படலம், மாலையீட்டுப் படலம், கடிமணப் படலம், மீட்சிப் படலம் ஆகிய பகுதிகளுக்கான உரை காணப்பெறுகின்றது.

கணேசையரின் உரைவன்மை

கணேசையரின் உரைநெறியானது பழந்தமிழ் உரையாசிரியர்களது நெறியைப் பின்பற்றிச் செல்வது. பாடலடிகளைக் கொண்டுகூட்டியமைத்துப் பதவுரை தருகின்ற கணேசையர், விளக்கவுரைப் பகுதியிலே, இலக்கணக் குறிப்புகள், மேற்கோள்கள், ஒப்பீடுகள், செய்யுள் இரசனைக் குறிப்புகள் என்பவற்றைத் தந்து செல்கின்றார். தாம் கொள்ளும் பொருளை விடவும், வேறு பொருள்கள் உரைக்கக் கூடியதாக இருப்பின், அவற்றையும் தந்து செல்லுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, இரகுவமிசக் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு வரைந்துள்ள உரையைச் சுட்டலாம். இப்பாடலின், 'சிதைவிலா நிலவுச் செக்கர் செவ்வந்தி மெய்யார்' எனும் அடிக்கு, 'அழிவில்லாத நிலவினையுடைய செவ்வானம் போன்ற (விபூதியையணிந்த) திருமேனியையுடையவராகிய சிவபிரானார்' எனும் பொருளை முதலிலே தெரிவித்துள்ளார். பின்பு, விளக்கவுரைப் பகுதியிலே, பின்வருமாறு ஏனைய பொருத்தமுறு பொருளையும் தந்து செல்லக் காணலாம்.

'செந்நிறமான மேனியின் மீது வெண்ணிறமான விபூதி
பரந்திருத்தல், செவ்வானத்தின் மீது
வெண்ணிலாப் பரந்திருத்தல் போலுமென்பார், நிலவுச் செக்கர்ச்
செவ்வந்தி மெய்யார் என்றார்...
சிதைவிலா என்பதை அந்திக்கேற்றி இல்பொருளுவமை
யாக்கினு மமையும்'

உரையாசிரியர்களுடைய பணிகளுள் முக்கியமான ஒன்று. யாப்புத் தேவைகளுக்காகப் பொருள் தொடர்ச்சியற்றிருக்கின்ற செய்யுள் அடிகளைக் கொண்டு கூட்டி வினைமுடிவு தொகுத்துப் பொருள் காண்பதாகும்.

'இன்ன காதை யியன்ற விரும்பொருட்
டுன்னு செஞ்சொற் றுகடபு தூயநூல்
பன்னு செஞ்சொற் பரராச சேகர
மன்ன னின்ப மனங்கொள வாய்ந்ததே'

எனும் பாடலுக்கான உரையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

வேண்டிய இடங்களில் இலக்கணக் குறிப்புகளைத் தந்து செல்லும் உரையாசிரியநெறியை, கணேசையரின் இரகுவமிச உரையிலும் பரக்கக் காணமுடிகிறது. கணேசையரின் விருப்புக்குரிய

துறைகளில் ஒன்றாக இலக்கணம் விளங்கியதென்பது தெரிந்ததே. எனவே, அவசியமான இடங்களில் எல்லாம் விளங்கத்தக்கக வகையில் இலக்கண விளக்கங்களை இவர் உரைத்துச் செல்லத் தவறவில்லை. எடுத்துக்காட்டாக, மீட்சிப்படலத்தில் வருகின்ற 'விரையணி தூசிவிட்டார்' எனத் தொடங்கும் பாடலுக்கான விளக்கத்தைக் காட்டலாம். இவ்விளக்கத்தில் 'விட்டார், நிறுவிவிட்டார், செய்தார், அமைத்தார், நிற்கச்செய்தார் என்னும் வினைமுற்றுகளுக்கு, அரசர்கள் என்பது எழுவாயாகும். அரசர்கள் என்னும் தோன்றா எழுவாய் அதிகாரத்தானே வருவிக்கப்பட்டது' என்று கணேசையர் குறிப்பிடுகின்றார். வேண்டிய இடங்களில் இலக்கணச் சூத்திரங்களை எடுத்துரைப்பதும் இவர் உரைமரபாகும். எடுத்துக்காட்டாக, அயனெழுச்சிப் படலத்தில் வரும் 'இயல்வரும்' எனும் பாடலுக்கான விளக்கத்தில், 'இடங்கை வலங்கை என்பன மெல்லெழுத் துறழு மொழியுமாருளவே - செல்வழியறிதல் வழக்கத்தான என்னும் சூத்திரவிதி பெற்று வந்தன' என்றுரைப்பதைக் காட்டலாம்.

சொற்களுக்கு அகாரதிப் பொருள் முதலியன தருதலும், தொகைச் சொற்களை விரித்து வகைகளை விளக்கி உரைத்தலும் உரையாசிரியர்களின் பணிகளாகும். 'முப்பெருந்திறத்து மூரி முரசும் மும்மதம் பொழி' எனத் தொடங்கும் பாடலில் வருகின்ற மும்முரசு, மும்மதம் ஆகியவற்றை விளக்கியுரைக்கும் கணேசையர் 'மும்முரசாவன மணமுரசு, கொடைமுரசு, வெற்றிமுரசு என்பன. மும்மதமாவன, கைம்மதம், கோசமதம், கன்னமதம் என்பன' என வகைகளைச் சுட்டிச் செல்கிறார். இதுபோன்ற பல இடங்களிலும் சொற்பொருள் தரும் உரைநெறியைக் கணேசையர் சிறப்புற இவ்வுரையில் நிறைவேற்றியிருப்பதை அறியலாம். மேலும், அரசகேசரியார் சொற்களை எவ்வளவு அவதானத்தோடு பெய்துள்ளாரென்பதனை, காரணம் சுட்டி கணேசையர் விளக்கியுரைக்கும் பான்மையும் இவ்விடத்தில் சுட்டப்படத்தக்கது.

'பாசவினையைக்கடி தறுத்து நெறிபற்றா
ஈசனை உளத்தினில் இருத்திய தவத்தோர்'

என்னும் பாடல் வரிகளுக்கு கணேசையர் பின்வருமாறு விளக்கம் தருகிறார். 'வீட்டுநெறி வினைகளை அறுத்தவழியன்றிப் பற்றப்படாமையின் அறுத்து நெறி பற்றா என்றும், பற்றிய வழியும் ஐம்புல நுகர்வோர் தவத்தராகாமையின் ஈசனை உளத்தினிலிருத்திய தவத்தோர் என்றும் கூறினார்'' எனக் கணேசையர் தரும் விளக்கம் அரசகேசரியார்

புணர்த்தியுள்ள அடைகளின் பொருட்சிறப்பைக் கற்போர்க்கு எடுத்துரைக்கின்றது. இவ்வாறு, கவிஞரின் கவித்துவத்தை இயலுமான இடங்களிலெல்லாம் எடுத்துரைத்து, தமது உரையாசிரியப் பணியைச் செம்மையுறக் கணேசையர் நிறைவேற்றியுள்ளார்.

கணேசையர், இரகுவமிசத்துக்கு வரைந்துள்ள இவ்வுரை, தொல்காப்பியமாதி இலக்கண நூல்களிலும், திருக்குறளாதி இலக்கிய நூல்களிலும் இவர் எத்துணைதூரம் பயிற்சியுடையவராக இருந்துள்ளார் என்பதனை எடுத்துக்காட்டி நிற்கின்றது. திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, திருக்கோவையார், இராமாவதாரம் முதலிய இலக்கிய மேற்கோள்கள் இவர் உரையில் எடுத்தாளப் பெற்றுள்ளன. 'ஒன்பது கோடி என்றது பலகோடியை. எழுபது கோடியுறும் என்புழிப்போல' என்று தேனுவந்தனப் படலப் பாடலொன்றுக்கு எழுதியுள்ள உரைப்பகுதி இதனை எடுத்துக்காட்டும். தொல்காப்பியர் நெறியில் அவர் சென்றுள்ளமைக்கு, நாட்டுப்படலத்தில் வரும் பின்வரும் உரைப்பகுதி தக்க எடுத்துக்காட்டாகும்:

".....நரந்தராக நள்ளிருணாறி என்னும் குறிஞ்சிப் பாட்டில் (94 ஆம் வரி) நாகம் என்பதற்கு நாகப்பூ என நச்சினார்க்கினியர் கூறியதனானும் அறியப்படும்..... இதனால் குறிஞ்சிநிலம் தனக்குரிய பண்டமாற்றினால் ஏனை மூன்று நிலங்களோடும் மயங்கியதாகக் கூறப்பட்டது எங்ஙனமெனின், குறிஞ்சி நிலத்திலுள்ள மகளிர் தம் நிலத்துக்குரிய நாக முதலிய மூன்றையுங் கொடுத்து முறையே நெய்தல், மருதம், முல்லை என்னும் மூன்றிற்குமுரிய புன்னாக முதலிய மூன்றையும் பெற்றுக் கொள்வார்க ளென்பதனாலென்க"

முடிவுரை

உரை காணப்படாதிருந்த இரகுவமிசக் காவியத்தின் முதற்காண்டத்திற்கு, கணேசையர் இயற்றிய புத்துரை, இவர்தம் உரைவன்மையைத் தக்கவாறு எடுத்துக்காட்டுகின்றது. கணேசையரின் உரைத்திறத்தை 'சொற்பொருள்கள் இனிதுணர்ந்தே இலக்கண நூல் முடிவுகளும் துலங்கக் காட்டி விற்பனம் சேர் உரையொன்று வரைந்தளித்தார்' எனச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும், 'நலம் பூத்த சுவையிரகு வங்கிசத்திற் கினியவுரை நன்கியற்றிப் பலம் பூத்த தமிழ் வலவர் மதிப்ப வெளிப்படுத்தினன்' என உ.வே. சாமிநாதையரும் பாராட்டியுள்ளனரென்பதிலிருந்து அறியமுடியும்.

'அய்யன் திருவள்ளுவர்' தொடர் சரியா?

தமிழாகரர் தெ. முருகன்
புதுச்சேரி-9

முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரால் 2000 சனவரி பிறப்பின் போது கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலைக்கு 'அய்யன்' என்ற அடைமொழி சேர்த்துச் சிறப்பித்தபோது அத்தொடர் பல்வேறு வகையில் சிலரின் சொல்லாய்வுக்கும் சொல்லடிக்கும் இலக்கானது.

ஒருமை பன்மை மயக்கம் என்றனர் சிலர். பகுத்தறிவாதியான முதல்வர் அய்யர் என்ற சாதியை நினைவுகூறும் விதமான அய்யன் எனலாமா ! என்றனர் சிலர். கடவுள் நம்பிக்கையில்லாத கலைஞர் அய்யப்பனைக் குறிக்குமாறு அய்யன் எனலாமா? என்றனர் சிலர். திருவள்ளுவருக்குப் பத்துப் பெயர்கள் இருக்க அய்யன் என்றது தேவையா என்றனர் சிலர்.

பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லை இலக்கணப்படியறிந்து பொருள் காண வேண்டும். தோட்டத்தில் மா வீழ்ந்தது என்றால் மா-மரத்தைக் குறிக்கும். போர்க்களத்தில் மா வீழ்ந்தது என்றால் மா-விலங்காகிய குதிரையைக் குறிக்கும். இப்படி இடம் சார்ந்து சொல்லின் பொருளை உணர்தல் போன்றது அய்யன் என்ற சொல்.

அது தலைமையையும் சாதியையும் குறித்தாலும் திருவள்ளுவரின் சிறப்புநோக்கித் தலைவன் என்ற பொருளில் அண்ணல் அம்பேத்கார் என்பது போலப் பொருள் பொருத்தம் உடையதை ஏற்கலாம். சாதிப் பெயர் முன் ஒட்டாக அமையாதென்பதால் சாதிக் கருத்துக்குப் பொருள் பொருத்தம் இல்லை எனலாம்.

மேலும் இவ் அடைமொழியை இட்டுரைத்தவரின் உணர்வு நோக்கியும் பொருள் காண்புழி அய்யன்-தலைவன் என்ற பொருளே பொருந்தும் எனத் தெளிய வேண்டும்.

ஐயன் ஐயாறனாரே என்ற அப்பர் தேவாரத் தொடரில் உள்ள ஐயன் என்பது ஐயாற்று ஈசனைக் குறிக்கும். பாடிய இடம் நோக்கியும் பாடியவரை நோக்கியும் அச் சொல் கடவுளை நினைவு கூறுவது போலத் திருவள்ளுவருக்கான அய்யன் என்ற அடைமொழி அய்யப்பக் கடவுளின் மரூஉச் சொல்லாகப் பகுத்தறிவுவாதியான கலைஞர் வைப்பாரா எனச் சிந்திப்பது பொருந்துமன்றோ ! எனவே சுவாமி விவேகானந்தர், பகவான் இராமகிருட்டிணர் என்பது போல அய்யன் என்றது தலைமையைக் குறிக்கும் அடைமொழியேயன்றி அது திருவள்ளுவருக்கான பெயராகாது என்பதும் உண்மையாகும்.

அய்யன் திருவள்ளுவர் என்றதில் ஒருமை பன்மை மயக்கம் என்றால் வள்ளுவரில் உள்ள ரகரம் வள்ளுவர்கள் என்ற பன்மையை உணர்த்துமா? அது எந்த வகையில் பன்மை எனப்படுகிறது? பலர்பால் பன்மைக்குறிய விகுதியைப் பெற்றுவிட்டதாலேயே அதனைப் பன்மையாகக் கருதமுடியாது. பொருள் அடிப்படையில் அச்சொல் ஒருமையைக் குறிப்பதால் மரியாதை கருதிய பன்மையன்றி பலர் பால் பன்மையன்று. இந்த ஒருமையைக் குறிக்கும் மரியாதை கருதிய பன்மைக் கேற்பவே அதாவது இயற்பெயருக்கேற்பவே சிறப்பு அடைமொழி அமைய வேண்டும் என்ற கருத்தும் இல்லை என்பதைத் தொல்காப்பிய நூற்பாக்களைக் கொண்டு உணரலாம்.

‘சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும் இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்’ என்ற தொல்காப்பிய சொல்லதிகாரக் கிளவியாக்க நூற்பா (41) இயற்பெயருக்கு முன்னர் சிறப்புப் பெயர் வரவேண்டும் என்கிறது. ஏனாதி நல்லுதடன், காவிதிகண்ணந்தை, எட்டி சாயலன் என்பன எடுத்துக்காட்டுக்களாகும்.

மேலும் இந்நூற்பாவில் கிளவிக்கும் என்ற உம்மையால் தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயின வற்றாலாகிய பெயரும் கொள்ளப்படும். அவை முனிவன் அகத்தியன், தெய்வப்புலவன் திருவள்ளுவன், சேரமான் சேரலாதன், குருடன் கொற்றன் என்பனவாம் என்று சேனாவரையர் கூறினார்.

இவ்விரு வகை எடுத்துக்காட்டில் முதலாவது ஈறு பற்றியதன்று; இரண்டாமதில் ஈறுபற்றியதாக உள்ளது. ஆனால் இரண்டின் பொதுமைத் தன்மையாக உணர்கையில் ஒருமைக்கு ஒருமை என்ற உண்மை தெரிகிறது.

ஆனால் இந்த ஒருமைக்கு ஒருமை என்ற வரையறையில் தான் சிறப்புப் பெயரும் இயற்பெயரும் வரவேண்டுமா? இந்நியதியைக் கடந்து ஒரே வழி வர வாய்ப்பில்லையா? என்ற சிந்தனையின் முகிழ்ப்பால் தொல்காப்பியர் சொல்லதிகார எச்ச இயலில்,

ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகும் இடனுமா ருண்டே (௬5)

என ஒருவரையே சுட்டும் பன்மைச் சொல் ஒரே தொடரில் ஒருமை பன்மையாக அமையலாம் என்றார்.

இந்நூற்பாவுக்குச் சேனாவரையர் இருபொருள் கூறுகிறார். ஒரு தொடரில் ஒருமை பன்மை சொற்கள் தொடரும் போது பன்மைக்கேற்ப ஒருமைச் சொல்லைப் பன்மையாக்கிக் கொள்ளலாம் என்பது ஒரு பொருள்! 'வெவ் இளையர் தாய் வயிறு கரிப்ப' என்ற தொடரில் இளையர் என்ற பன்மைக் கேற்பத் தாய் - தாயர் எனப்படும் என்பது ஒரு பொருளுக்கான எடுத்துக்காட்டு.

ஒன்றையே குறிக்கும் ஒருமையும் பன்மையும் ஒரு தொடரில் அமையலாம் என்பது மற்றொரு பொருள். அஃதை தந்தை, அண்ணல் யானை அடுப்போர்ச்சோழர் என்ற அகநானூற்றுத் தொடரில் தந்தை என்ற ஒருமைச் சொல் சோழர் என்ற பன்மையைத் தொடர்ந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டாகச் சேனாவரையர் கூறியுள்ளார். இதில் சோழன் என்பது சோழர் எனப் பன்மையாகக் கூறப்பட்டாலும் இந்த ரகரம் மரியாதை கருதிய பன்மையன்றிப் பலர்பால் பொருளில் கூறப்பட்ட பன்மையன்று என்பதே உண்மை.

இக்கால வழக்கில் உள்ள தந்தை பெரியார், கலைத் தந்தை தியாகராசர், தனித்தமிழ் தந்தை மறைமலை அடிகள் என்பன தந்தை சோழர் என்று எடுத்துக்காட்டப்பட்டதற்கு இணையான சொற்களாகும்.

அஃதை என்பவனின் தந்தை சோழர் என்பது கருத்தாகும். தந்தைக்கு அஃதை என்பதும் சோழர் என்பதற்கு அண்ணல்யானை அடுபோர் என்பனவும் அடைமொழிகள். அவைகளை நீக்கினால் 'தந்தை சோழர்' என்ற தொடரே ஒருமை பன்மையாக நிற்கும் தொடர் எனலாம். இதனால் இயற்பெயருக்கேற்பவே சிறப்புப் பெயர் ஒருமைக்கு ஒருமை

பன்மைக்குப் பன்மை என்பதன்றி ஒரே வழி மாறி அமைய வாய்ப்புள்ளதன் அடிப்படையில் பகவான் புத்தர், மகான் அரவிந்தர், அய்யன் திருவள்ளுவர் என்ற சொற்கள் வழுவின்றி அமைந்தன எனலாம்.

மேற்கூறிய இலக்கண அமைதியின்படி இயற்பெயர், சிறப்புப் பெயர்கள் 'கடிதல் இல்லை காலத்துப் படினே' என்ற தொல்காப்பிய விதிப்படி ஒருமைப் பன்மைகள் பின் முன்னாக அமைவதையும் வழக்காற்றில் காண்கின்றோம்.

பாவேந்தர் பாரதிதாசன், புலவர் வரதராசன், முனைவர் முத்தப்பன் என்ற தொடர்கள் பன்மை ஒருமை மயக்கமில்லாதவை. இங்ஙனம் அமைவதெல்லாம் காலப் போக்கில் வழக்காற்றில் அமையும் இலக்கண வளர்ச்சியின் கூறு ஆகும். இதைத்தான் ''வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' இலக்கணம் செய்யப்பட்டதாகப் பனம்பாரனனார் தொல்காப்பியப் பாயிரத்தில் கூறியுள்ளார்.

ஆக ஒருமை சுட்டிய என்ற எச்ச இயலின் நூற்பாவின் ஓர் உரையின்படி அய்யன் திருவள்ளுவர் என்ற தொடர் சரியே ஆகும். இதே வழுவிலா நிலையில்தான் பாரதியார் 'பார்ப்பானை ஐயர் காலமும் போச்சே'' என்ற தொடரை ஒருமை பன்மை மயக்கமாகக் கூறாமல் கவிதை யாத்தார்.

எனவே, அடைமொழியாம் சிறப்புப் பெயரும் இயற்பெயரும் ஒரு தொடராக அமையுங்கால் ஒரே ஈறாகத்தான் வரவேண்டும் என்ற நியதியில்லாமல் ஒரோ வழி மாறியும் அதாவது கலந்தும் வரலாம் என்பதற்கு இலக்கிய வழக்கும் உலகியல் வழக்கும் சான்றுகளாக உள்ளதால் 'அய்யன் திருவள்ளுவர்' என்ற தொடர் இலக்கணத்தோடமைந்த வழுவிலாத் தொடர்ஆம்.

மனோன்மணீயம் நாடகத்தில் திருவாசகச் சொல்லாட்சியும் கருத்தாளுகையும்

[redacted] சங்கீத்ராதா

முன்னுரை

காான்ஸ்டாண்டிநோபில் நகரம் கி.பி. 1453ஆம் ஆண்டு துருக்கியர் கைவசமானபோது அந்நகரில் அடைக்கலம் பெற்றிருந்த படிப்பாளிகள் (intellectuals) இத்தாலிய நகரங்களுக்குத் தப்பிச் சென்று பண்டைய இலக்கியங்களை மறுவாசிப்பு (revival of classical learning) செய்து மறுமலர்ச்சிக்கு (Renaissance) வித்திட்டமை எவ்வாறு உலக வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்ததோ அதேபோன்று வியாபாரத்திற்காகவும் அவர்தம் கிறித்தவ சமயத்தை பிற நாடுகளில் வேரூன்றச் செய்ய வேண்டும் என்ற எத்தனிப்பிற்காகவும் இந்தியாவிற்குள் நுழைந்த ஐரோப்பியர்கள் கல்கத்தா நகரில் 1784ஆம் ஆண்டு உருவாக்கிய ஏசியாடிக் சங்கம் (Royal Asiatic Society of Bengal) இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அக் காலங்களில் இந்திய அறிவு (Indology) பற்றிய பாடப்பிரிவுகளுக்கு இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளின் பல்கலைக் கழகங்களில் தனித்துறை அமைத்து கற்றறிந்தனர் மற்றும் கற்பித்தனர்.

இந்திய இதிகாச, புராணங்களை மற்றும் தொன்மை நூல்களை மறுவாசிப்பு செய்ய முனைந்த ஐரோப்பியர்கள் உள்ளூர் பண்டிதர்களிடம் இந்திய மொழியறிவைப் பெற்றனர். ஐரோப்பியர்களின் தேடுதல்களுக்கு ஒத்துழைக்கப் போந்த இந்திய படிப்பாளிகளுக்கு ஆங்கில மொழிப்புலமை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் விளைவாகப் புதிய இலக்கியங்களை உருவாக்கும் உள்ளுணர்வை (instinct) அவர்கள் இயல்பாகப் பெற்றனர். ஐரோப்பிய இந்திய படிப்பாளிகளின் கூட்டு முயற்சி 19ஆம் நூற்றாண்டில் பெரிய சமூக மறுமலர்ச்சியைத் (Social Renaissance) தோற்றுவித்தது. ஒருபுறம் ஆங்கிலக் கல்வியும் இந்தியச் சனாதனதர்மத்தில் அசைக்க முடியாத பிடிப்பும் கொண்ட பல புரட்சிச் சிந்தனையாளர்கள் - குறிப்பாக, இராஜராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர், வடலூர்

இராமலிங்க வள்ளலார், நாராயணகுரு - போன்றவர்கள் சமூக முன்னேற்றம் நோக்கிய வழித்தடத்தை வகுத்துத் தந்தனர். மறுபுறம் புதிய படைப்பாளிகள் தோன்றி புதிய இலக்கியப் படைப்புகளுக்கு கால்கோள் இட்டனர்.[1]

இக் காலச் சூழலில் இற்றைக்குக் கேரளம் என்று வழங்கப்படும் திருவிதாங்கோடு பகுதியில் பிறந்து தமிழன்னைக்கு 'மனோன்மணீயம்' என்ற நாடக காப்பியத்தை லார்டு லிட்டன் என்பவரின் 'ரகசிய வழி' (The Secret Way) என்ற நூலின் கதையை உருமாற்றி தமிழ் மரபுக்கு உட்படுத்தி உலகத் தரம் வாய்ந்த நாடக காப்பியங்களுக்கு ஒப்பாகப் புனைந்து அவர் வாழ்ந்த காலம் வரை தமிழ்மொழியில் சிறந்த ஒரு நாடக நூல் இல்லையே என்ற குறையை தம் பெருமுயற்சியால் போக்கிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை வாழ்ந்து சிறந்தார். அவர் ஒப்பிலக்கிய மரபின் முன்னோடி என்று கூட போற்றும் தகைமைக்குரியவர் ஆவர்.

இற்றைநாள் தமிழகஅரசு அதிகாரப்பூர்வ வாழ்த்துப் பாவாக ஏற்றுக்கொண்ட தமிழ்தாய் வாழ்த்துடன் தொடங்கி தமிழ் மொழியையே இறைவடிவமாகவும் இறைவனின் தத்துவார்த்த விளக்கமாகவும் கொண்டு தமது நாடக நூலை சுந்தரனார் தொடங்கி 'நற்பொருளைத் தரும் தன்மைத்தாகி, தன்னேரில்லாத தலைவனை உடைத்தாய், மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர் தோற்றம் முதலியவற்றைப் புனைந்துரைத்து, நன் மணம் புணர்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல் முதலியன வருணிக்கப்பெற்று, மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி, சந்தியில் தொடர்ந்து, சருக்கம், இலம்பகம் என்னும் பாகுபாட்டுடன் அமைந்து வருவது காப்பியமாகும்'' என்னும் தண்டியலங்கார வரையறைப்படி கட்டமைத்துள்ளார்.[2]

செம்மொழித் தகுதி பெற்ற உலக மொழிகள் எல்லாம் வழக்கிழந்துபோன கால வெள்ளத்தில் ஒலி வடிவம் சிதையாமல் ஈராயிரம் ஆண்டுகளையும் கடந்து சிறந்த தமிழை பல உயிர்களையும், பல உலகங்களையும் படைத்து, காத்து, அழிக்கும் ஒப்பற்ற பரம்பொருளாய் முன் இருந்தவாரே மாறுபடாமல், மூப்பறியாமல் இருப்பதைப் போல் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலான பல திராவிட மொழிக்குத் தாயாக விளங்கினாலும் தமிழ்த்தாய் இளமை மாறாது தோற்றமளித்து வருகிறாள் எனச் சிறப்புப் பாயிரத்தில் விளக்கமளித்து தமிழைக் கடவுளுக்கு ஒப்பாக்கிக் காணும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மணிவாசகரின் திருவாசகத்தில் தாம் தோய்ந்த அனுபவத்தை விரிவாக உணர்த்துகிறார்.

'மனோன்மணீயம்' நாடக நூல் முழுதும் திருவாசகச் சொல்லாட்சியும் கருத்தாளுகையும் எங்ஙனம் விரவிக் கிடக்கின்றன என்ற முறைமை பற்றி இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

'நாயேனை தன் அடிகள் பாடுவித்த நாயகனை' என்று சராசரி மனிதனின் இழி நிலையை தம் மீது ஏற்றி உரைக்கும் மாணிக்கவாசகர் போல தன்னை நூலின் தொடக்கத்தில் சுந்தரனார் அறிமுகம் செய்யும் தருணத்தில் 'அடியேன் கடையேன், அறியாச் சிறியேன், கொடுமலையாளக் குடியிருப்புடையேன்' எனக் குறைத்துச் சொல்லிக் கொள்கிறார்.

பிரபஞ்சத் தோற்றத்திற்கு நிமித்த காரணனாக விளங்கும் சிவபெருமானே மகாசங்கார கராணனாக இவ்வுலகம் முழுவதும் ஒரு காலத்தில் ஒடுக்கிக் கொள்வான். அப்போது அவன் மட்டுமே தனித்திருப்பான். அத்தனிமையைப் போக்கிக் கொள்ளவே திருவாசகத்தை தன் கைப்பட எழுதி திருச்சிற்றம்பலமுடையான் என்று கைச்சாத்திட்டு வைத்துக்கொண்டான் என்பது 'கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள் உடையார் உன் வாசகத்தின் ஒருபிரதி கருதினதே' என்ற பாயிர வரிகளால் அறியப்படுவதாக முன்னோர் மரபு கூறுவர்.

உயிர்களைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் முற்றிலும் விலக வேண்டுமானால் அதற்கு ஒரே உபாயம் இறை வழிபாடே. அந்த இறை வழிபாட்டிற்கு முதற்படி ஞானநூல்தனை ஓதுதல். அதனால் திருவாசகம் என்னும் ஞானநூல் மனத்தை கரையச் செய்வதோடல்லாமல் மலங்கெடுக்கும் என்ற சித்தாந்த நுட்பத்தை தம் காப்பியத்தின் தொடக்கத்திலேயே 'மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள் கனஞ்சடையென்றுருவேற்றிக் கண் மூடிக் கதறுவறோ' என்ற வரிகளில் பதிவு செய்துவைத்துள்ளார்.

'கண்டவரைக் கேட்டவரைக் காசினியில் தேடிக்
கண்டிடச் சென்றேயலைந்த கட்டடிமனைத் தென்க?
உண்டெனத்தம் யூக நெறி உரைப்பரே அல்லால்
உள்ளபடி கண்டறிந்தோர் ஒருவரையும் காணேன்'[3]

என்ற சிவகாமி சரிதப் பகுதியில் தலைவனைக் காணமுடியாது உள்ளத்தால் குறைவுபட்டுக் கொண்ட தலைவியின் புலம்பலைத் திருவாசகம் திருப்பள்ளியெழுச்சிப் பாடலில்

'பூதங்கள் தோறும் நின்றாய் எனில் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கிதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை'[4]

என்று இறைவன் ஐம்பூதங்களிலும் கலந்திருக்கிறான் என்றும், அவனுக்கு முடிவும் இல்லை தோற்றமும் இல்லை என்றும், புலமை மிக்க ஞானிகள் பாடல்கள் மூலம் பாடுவதும், ஆடுவதும் செய்கிறார்களே தவிர, அவனை நேரில் கண்டு வழிபட்டவர் யாரென்று இதுவரை காதால் கேட்டு அறியவில்லை என்று மாணிக்கவாசகர் குறைபட்டுக் கொண்டதனைக் காட்சிபோல வடித்துக் காட்டியுள்ளார்.

'தென்னானை காவானை தென்பாண்டி நாட்டானை' என்றும் 'அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே' [5] என்றும் அமைந்த மணிவாசகரின் திருவம்மானை வரிகளுக்கு ஈடாக குடிலன் சுந்தரமுனிவரிடம் விண்ணப்பிப்பது போன்று 'தென்பாண்டி நாடே சிவலோகம் ஆமென முன் வாதவூரர் மொழிந்தனர், அன்றியும் தரணியே பசுவெனச் சாற்றலும் மற்றதில் பரதமே மடியெனப் பகர்வதும், சரதமேல் பால்சொரிசுரை தென் பாண்டி என்பது மேல் விளம்பாதே விளங்கும்' [6] என தென் பாண்டி மண்டலத்தின் சிறப்பினை விதந்தோதி இறும்பூதடைகிறார்.

தன் காதலன் நடராசனை மணக்கச் சம்மதியாது குடிலன் மகன் பலவேதனை மணமுடிக்க வற்புறுத்தும் நிலையில் யாரிடம் எடுத்துச் சொல்வேன், நீண்ட கடல் சூழப்பட்ட உலகில் வாழேன், மாழ்வது திண்ணம், மடிவேன் வீணாய்' என தோழி மனோன்மணியிடம் 'யாரோடு நோவேன்? யார்க்கு எடுத்துரைப்பேன்? வார்கடல் உலகில் வாழ்கிலேன், மாளுவன் திண்ணம், மாளுவன் வறிதே' [7] என்று கூறுவதாக அமைந்துள்ள சொல்லாட்சி மணிவாசகர் வாழாப்பத்தின் முதற்பாடலில் ஆட்கொண்ட இறைவன் தனக்கு அருள்புரியாமல் புறக்கணித்தால் இதை வேறு யாரிடம் முறையிடுவேன்? யார்க்கு உரைத்துத் துன்பத்திலிருந்து விடுபடுவேன்? கடல் சூழ்ந்த உலகில் இனியும் வாழமாட்டேன் என்ற கருத்துப்பட 'ஆரோடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன் ஆண்ட நீ அருளிலையானால், வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய் வருக என்று அருள்புரியாயே' [8] எனச் சூளுரைத்தற்கொப்பாக அமைந்துள்ளது.

திருவனந்தையில் சேரன் அரண்மனையில் மனோன்மணியைக் கனவில் கண்ட புருடோத்தமன் 'விண்ணணங்கனைய கன்னியர் பலரென் கண்முன்னின்றங்கிரக்கினுங் கலங்காச் சித்தம் மத்துறு தயிரில் திரிந்து பித்துறச் செய்தவிப் பேதை யார் கொலோ? எவ்வுலகினளோ?

அறியோம்' [9] என்று தனிமொழிபேசுவதாக அமைந்துள்ள வரிகள் மாணிக்கவாசகர் தன்னை ஆட்கொண்ட இறைவன் மீண்டும் விட்டுவிட்டுச் சென்றுவிட்டானே என்று கண்ணீர் விட்டு அழும் பொழுது 'மத்துறு தண் தயிரின் புலன் தீக்கதுவக் கலங்கி வித்துறுவேனை விடுதிகண்டாய்' [10] அதாவது மத்தினால் கடையப்படும் குளிர்ந்த தயிரைப் போல, புலன்களாகிய தீப்பற்றி வெதுப்பக் கலக்கமுற்று, வித்துப்போல வேரூன்றி அழுந்தும் தன்மை கொண்ட அடியேனைக் கைவிடாதே என புலம்பியதற்கொப்பாக அமைந்துள்ளது.

மற்றொரு நீத்தல்விண்ணப்பப் பாடலில் 'எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால் அரிப்புண்டலந்த வெறுந்தமியேனை விடுதிகண்டாய்' என்று மணிவாசகர் ஐம்புலன்களாலும் துன்புறுத்தப்படும் தன் நிலை பல எறும்புகளின் இடையில் அகப்பட்டுச் சித்திரவதைக் குள்ளாகும் நாங்கூழ் புழுவினைப்போல உள்ளதாக உவமித்திருப்பதை நினைவு கூர்ந்து 'உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்தாக' இருந்துவரும் நாங்கூழ்ப்புழுவைப் பார்த்து தனி மொழி பேசும் பொழுது 'இப்புற்பயிர் நீ இங்ஙனம் உழாயேல் எப்படியுண்டாம்? எண்ணாதுனக்கும் குறும்புசெய் எறும்புங் கோடி கோடியாய் புழுக்களும் பூச்சியும் பிழைக்குமாறென்னை' [11] என பயிர் விளைச்சலுக்கு ஒத்துழைக்கும் நாங்கூழ் புழுக்களுக்கு எறும்புகள் செய்யும் இன்னலை நினைத்துப் பார்த்து நடராசன் என்னும் துணைப் பாத்திரத்தின் வழி நெஞ்சம் வருந்துகிறார்.

வேறு ஒரு நீத்தல் விண்ணப்பப் பாடலில் 'உள்ளனவே நிற்க இல்லன செய்யுமையல்துழனி வெள்ளனலேனை விடுதிகண்டாய் வியன்மாத்தடக்கைப் பொள்ளல் நல் வேழத்(து) உரியாய் புலன் நின்கண் போதல் ஒட்டா மெள்ளெனவே மொய்க்கும் நெய்க்குடம் தன்னை எறும்பெனவே' [12] என்று சொல்லி தன் மனம் இறைவன்பால் போக முடியாதபடி நெய்நிறைந்த குடத்தை எறும்பு மொய்த்து வாயில் வழியைத் தடைசெய்வது போல ஐம்புலன்களும் மெதுவாக நெருங்கிச் சூழ்ந்து மொய்க்கின்றன' என்ற மணிவாசகர் கருத்தை உள் வாங்கிய நாடக ஆசிரியர் 'நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணலென எண்ணாய்' [13] என்ற சிவகாமி சரிதப் பகுதியில் நண்பரும் சுற்றத்தாரும் நம்மை விரும்பி வந்து உணவு கொள்ளுதல், நறுமணமுள்ள நெய்க்குடத்தை எறும்பு மொய்ப்பதுபோல என ஒப்புமை காட்டுகிறார்.

ஜீவகபாண்டியன் போரில் தோற்றுவிட்டால் மகள் மனோன்மணியை யார் காப்பாற்றுவர் என்னும் குழப்பமான மனோநிலையில் நாராயணனுடன் உரையாடுவதாக வரும் காட்சியில்

'இருதலைக் கொள்ளியில் எறும்பானேன்' [14] என்ற வரிகள் மாணிக்கவாசகர் மேலும் ஒரு நீத்தல்விண்ணப்பப் பாடலில் 'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து விரிதலையேனை விடுதிகண்டாய்' என உள்ளே துளையுடைய மூங்கிலின் இருபக்கமும் நெருப்புப் பற்றி எரியும்போது துளைக்குள் நுழைந்து இருக்கும் எறும்பைப் போல உன்னை விட்டுப் பிரிந்து உலக வாழ்வின் வெறுப்புக்கும் உன்னுடைய பிரிவுக்கும் இடையே தவிக்கின்ற என்னை விட்டுவிடாதே என வருந்தும் அதே மனோநிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இற்றைநாள் ஆயுள் காப்பீட்டுக் கழகம் 'வாழும்போதும், வாழ்க்கைக்குப் பிறகும்' என்று சேமநலநிதி சேகரிப்பதுபோல குருநாதருடைய அருள் நமக்குக் களைத்துச் சோர்வுற்ற காலத்தில் உதவுகின்ற வைப்பு நிதி என கருணாகரர் நிட்டாபரர் தத்துவ உரையாடலிலே, 'எய்ப்பினில் வைப்பாயிருந்த பேரருள்' [15] என உரைப்பதாக ஒரு சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது. திருவாசகம் திருவண்டப்பகுதியில் 'சூழிருந்துன்பம் துடைப்போன் வாழ்க, எய்தினர்க்கு ஆரமுது அளிப்போன் வாழ்க' என்று வாழ்த்திக் கொண்டே வந்த மணிவாசகர் காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க' [16] அதாவது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் அடியார்களுக்கு இளைத்தபோது உதவும் வைத்த மாநிதியமானவன் என இறைவனைப் போற்றுவது இவ்வண் ஒப்பு நோக்கி உணரற்பாற்றது.

இறுதியாக நாடக முடிவில் மனோன்மணியும் புருடோத்தமனும் இணைந்த தருணத்தில் ஜீவகபாண்டியன் 'பள்ளக உவர்க்கடலிற் பாய்ந்தோடி ஒன்றானாய்' [17] என வாழ்த்தும்போது கூட திருவாசக திருச்சதக 'பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேலாக' [18] என்ற வரிகள் அவருடைய பயன்பாட்டிற்கு வருவதை காணமுடிகிறது.

புறநானூறு, திருக்குறள், தேவாரம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவிசைப்பா, கம்பராமாயணம், வில்லிபாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை, நைடதம், நளவெண்பா, தாயுமான்சுவாமிகள் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், நீதி நெறிவிளக்கம், நீதிவெண்பா, வேறுபல தனிப்பாடல்கள் என்று தாம் கற்றுணர்ந்த பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் சொல்லாட்சியை சுந்தரனார் தம் நாடகத்தில் பயன்படச்செய்துள்ளார் என்றாலும் திருவாசகத்தில் அவருக்கிருந்த தனித்துவம் வாய்ந்த ஈடுபாடு அவர்தம் சொல்லாட்சியிலும், பொருள் ஆளுகையிலும் அதிகமாகப் பரிணமித்து நிற்கின்றது.

உலக மானுடக் கவிஞர் பாரதிதாசன்

முனைவர் இ.கி. இராமசாமி
மதுரை - 14

அறிமுகம்

ஏப்ரல் திங்களில்தான் பாரதிதாசனின் பிறந்த நாளும் (29-4-1891) நினைவு நாளும் (21-4-1964) வருகின்றன. அவரை நினைவுகூர்வதன் மூலம் செந்தமிழ் இதழ் தன் கடமையொன்றையும் செய்து முடிக்கின்றது. தமிழ்மொழிக்குப் பாதுகாப்பு, தமிழ்வளர்ச்சி, தமிழருக்கு எழுச்சி, தமிழருக்கு மேம்பாடு, தமிழினமீட்சி என்ற அடிக்கருத்துக்களின் ஆளுமையினால் பாரதிதாசன் நாட்டு விடுதலைக்கு முன்னரும் நாட்டு விடுதலைக்குப் பின்னரும் உயர்ந்து நிற்கின்றார்.

இயக்கங்கள்

உலக நாகரிகங்கள் மதங்களைச் சார்பு கொண்டும், இனங்களைச் சார்புகொண்டும், மொழிகளைச் சார்புகொண்டும் தோன்றி வளர்ந்துள்ளன. இன்றைய அரசியல் இயக்கங்கள் கூட மதங்களைச் சார்புகொண்டு செயற்படுகின்றன. சில நாடுகளில் பொருளியல் கோட்பாட்டைச் சார்ந்து இயக்கங்கள் இருக்கின்றன. இன அடிப்படையில் செயல்படும் இயக்கமாகத் திராவிட இயக்கத்தைக் கொள்கிறோம். திராவிட இயக்கத்தின் தோற்றுவாயாக விளங்கிய நீதிக்கட்சி அரசுகள் 1920 முதல் ஆங்கிலேயர் வசமிருந்த மருத்துவக் கல்வித்துறையினை இந்திய மயமாக்கின. மருத்துவப்படிப்பில் சேருவதற்குச் சமற்கிருதம் கட்டாயம் என்ற நிலையினை மாற்றி எல்லோரும் மருத்துவப்படிப்பில் சேரும் வாய்ப்பினை உருவாக்கித் தந்தன. தனியார் வசமிருந்த கோயில் நிர்வாகத்தை இந்து சமய அறநிலையத்துறை என மாற்றி அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன.1967 இல் அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தி.மு.க. அரசு சென்னை மாகாணம் என்று இருந்த பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' என்ற பெயரைச் சூட்டியது. புரோகிதர் இன்றி நடைபெற்று வந்த திருமணங்களை - சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்லும் என்று சட்டம் ஆக்கிற்று. தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையினைச் சட்டமாக்கிற்று. இன்றுவரை திராவிட

இயக்க அரசுகள் இதே மொழிக் கொள்கையினைக் கடைப்பிடித்து வருகின்றன. இந்தியையோ, பிறமொழிகளையோ படிக்கவேண்டாம் என்று ஒருபோதும் சொல்லியதில்லை.

சீர்திருத்தம்

எம்.ஜி.ஆர். அரசு இன்னும் ஒருபடி மேற்சென்று பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்கள் சிலவற்றை ஏற்றுக்கொண்டு சட்டமாக்கிக் கடைப்பிடிக்கச் செய்தது. அவை : ணா, றா, னா, ணை, ளை, லை, னை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ என்பனவாகும். அத்துடன் அரசு ஊழியர்கள் தமிழில் கையொப்பம் இடவேண்டும் என்பதையும் வலியுறுத்தியது. ஆனால் இந்த எழுத்துச் சீர்திருத்தத்தையும் தமிழில் கையொப்பம் இடுவதையும் மறுதலித்து வருவோர் இன்றும் பலர் உள்ளனர். தனித்தமிழ் இயக்கத்தின் தாக்குரவால் தமிழ்ப் பெயரைச் சூட்டிக்கொண்ட பலரின் வாரிசுகளுக்கு இன்று வாயில் நுழையமுடியாத பிறமொழிப் பெயர்களைச் சூட்டியுள்ளனர். தூய தமிழ்ப் பெயரை வைத்துக் கொண்டவர்கூடத் தன் பெயரைக் கேட்டு எள்ளி நகையாடுவோர்க்கு அஞ்சிப் பெயர் மாற்றம் செய்து வருகின்ற அவலத்தையும் காணமுடிகின்றது. தமிழ்வழிக் கல்வியும் இன்றி, தமிழ்ச் சிந்தனையும் இன்றி ஒரு தலைமுறை உருவாகி வருகிறது. இப்போக்கில் விதிவிலக்குகள் இருக்கலாம். அதனைக் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. இந்தச் சூழலில் நமக்குப் பாரதிதாசன் தேவைப்படுகின்றார்.

பங்களிப்பு

அறிவியல், வணிகவியல், பொறியியல், மருத்துவம் போன்ற மதிப்பு மிகு (?) பட்டப் படிப்புகளுக்குச் செல்லும் வாய்ப்பின்மையால் தமிழ் படிக்கவரும் இன்றைய தலைமுறையினருள் பலர் எளிமை கருதி இதழியல், நாட்டுப்புறவியல், புதுக்கவிதையியல், திரை இசைப் பாடல்கள் ஆகியன பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபாடு காட்டுகின்றனர். இப்போக்கினின்றும் மாறுபட்டுத் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களிலும் சங்க இலக்கியங்களிலும் கீழ்க்கணக்கு நூல்களிலும் உரைகளிலும் சமய இலக்கியங்களிலும் நாட்டமும் புலமையும் உடைய இருபால் அறிவுச் செல்வங்களையும் காண முடிகின்றது. அறிவியல் தமிழ், கணினித் தமிழ் ஆகியவற்றில் முனைப்புக் காட்டும் இளவல்களும் இருக்கின்றனர். இவர்களையெல்லாம் இனங்கண்டு அரசும் பல்கலைக் கழகங்களும் ஊக்கமளிக்கும் என்று நம்புகிறோம். செம்மொழித்

தமிழாய்வுமையம் சீரிய பயிலரங்குகளை நடத்தி இக்குறிக்கோளை நிறைவேற்றி வருவதும் பாராட்டுக்குரியது. தகுதிப்பாடு மிகுந்த ஒப்பிலக்கிய ஆராய்ச்சியாளர்கள் சிலர் தமிழியல் ஆய்வுக்குப் பெரும் பங்களிப்புச் செய்து வருவதும் மனங்கொள்ளத்தக்கது. அதிலும் குறிப்பாக ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ந்து வந்தபோது பாரதிதாசனைப் பிறநாட்டு நல்லறிஞர்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்த தமிழ்ச் சான்றோரை அக்கவிஞரோடு வைத்தே எண்ண வேண்டும்.

பாரதிதாசனையும் ஜான்கீட்சையும் ஒப்பாய்வு செய்து பாரதிதாசனை உலகமானுடக் கவிஞராக உயர்த்திக் காட்டியுள்ளார் கா. செல்லப்பன். காதலியும் காதலனும் இணைவதைக் கண்டு வெட்கமடைந்து வெண்ணிலா மேகக்கூட்டத்தினுள் ஒளிந்துகொண்டது என்று வருணிக்கின்றார் ஜான்கீட்சு. குடும்பவிளக்கில் காதலர் இருவர் இணைவதைக் கண்ட வெண்ணிலா அவர்களின் நலம்பாடி வாழ்த்தி வணங்கிற்று என்று சித்தரிக்கின்றார் பாரதிதாசன். இலக்கிய நிகழ்வு ஒன்றுதான். அதன்மீது படைப்பாளனின் பார்வை வேறுபட்டு விழுகின்றது. அதில் அவர்களுடைய தனித்தன்மை ஒளிர்கின்றது. மேகக் கூட்டத்தில் மறைந்த வெண்ணிலாவைவிடத் தன் நிலையில் நின்று வாழ்த்திய வெண்ணிலா உயர்வாகத் தோன்றுகிறது நமக்கு.

இராபர்ட் பர்ன்சையும் பாரதிதாசனையும் ஒப்பாய்வு செய்த மதுரைப் பேராசிரியர் மு. இளமாறன் அவர்கள் இருவரும் காதலுணர்வையும் இயற்கை அழகையும் தங்கள் புலப்பாட்டுத் திறத்தால் உணர்த்தியுள்ள தனிப்பாங்கினைக் காட்டியுள்ளார். இராபர்ட் பர்ன்சு தம் சொந்த அனுபவத்தைப் பாடியவர். பாரதிதாசன் படர்க்கையிலிருந்து மற்றவரின் காதலுணர்வையும் கற்பனை மாந்தர்களின் காதலுணர்வையும் பாடியவர். அனுபவித்துப் பாடியவருக்கும் உணர்ந்து பாடியவருக்கும் பெரிய வேறுபாடில்லை என்கின்றார் மு.இளமாறன். காதலர்கள் பிரிந்துபோதலை இரண்டு கவிஞர்களும் உள்ளம் உருகப் பாடியிருந்தாலும் அந்த அவல உணர்வை வெளிப்படுத்துவதில் வேறுபட்டுள்ளனர்.

ஆனால் அவர்களுடைய கவிதைநடையில் காணப்படும் எளிமையும் வெளிப்பாட்டுத் திறனும் ஒரே மாதிரியாக உள்ளன.

இராபர்ட் பர்ன்சு சில பாடல்களில் காதலைச் சொல்வதைவிடப் பாலுறவை நேரடியாகச் சொல்லிவிடுகின்றார். (Robert Bruns's songs treat sex and not love)

ஆனால் பாரதிதாசன் காதலற்ற பாலுணர்வைச் சொல்லியதில்லை. (But nowhere does Bharathidasan uphold sex without love)

காதல் காதலுக்காகத்தான். காதலித்தோர் கட்டாயம் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு ஆங்கிலேயரிடத்தில் இல்லை. இந்த மரபு பர்ன்சு பாட்டிலும் காணப்பெறவில்லை. ஆனால் காதல் செய்தோர் கட்டாயம் திருமணம் செய்து கொண்டு இல்லறம் மேற்கொள்ள வேண்டும் என்ற தமிழ் அறநெறி பாரதிதாசன் படைப்புக்களில் அழுத்தமாகச் சொல்லப்பட்டுள்ளது.

அன்புதான் ஆணையும் பெண்ணையும் நிரந்தரமாகச் சேர்த்துவைக்கும் ஆற்றல் மிகுந்த உணர்வு என்று இருவரும் நிறுவிக் காட்டியிருக்கின்றனர். பாரதிதாசன் ஒருபடி மேற்சென்று பெண்ணுரிமை, பெண்கல்வி, பெண் முன்னேற்றம், சாதிமறுப்பு ஆகியவற்றைக் குடும்ப வாழ்க்கையோடு இணைத்துப் பாடியிருக்கின்றார்.

பைரனையும் பாரதிதாசனையும் ஒப்பாய்வு செய்த ஜான் சாமுவேல், ஆற்றோட்டங்களை வருணிப்பதில் அவர்கள் ஒத்தும் உறழ்ந்தும் செல்லும் நெறிகளை எடுத்துரைத்துள்ளார்.

வில்லியம் வேர்டுசுவொர்த்தையும் பாரதிதாசனையும் ஆராய்ந்த க.ப. அறவாணன், அவர்கள் இருவருள் பூத்துக் குலுங்கும் மலர்களையும் உதிர்த்து கிடக்கும் மலர்களையும் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டியதில் வல்லவர் யார் என்பதை அளந்து காட்டியுள்ளார்.

கருத்துரை

இப்படிக் கருத்துப் பொருத்தத்திலும் கவிதை வளத்திலும் உலகக் கவிஞர் பலரோடு ஒப்பிடும் நிலையில் மானுடக் கவிஞராக மதிக்கப்படுகின்றார் பாரதிதாசன். பாரதிதாசனை நினைப்பது பைந்தமிழை நினைப்பதாகும். பாரதிதாசனைப் படிப்பது நரம்பின் துடிப்பை மீட்பதாகும். இராபர்ட் பர்ன்சு, பைரன், வேர்டு சுவொர்த்து, கீட்சு ஆகியோரிடம் காணப்படாத மொழிப் பாதுகாப்புச் சிந்தனை பாரதிதாசனின் தமிழியக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

கச்சியப்பரின் கவிநயம்

பேரா.முனைவர். சரசுவதி இராமநாதன்
தலைவர் கண்ணதாசன் தமிழ்ச்சங்கம்
சென்னை

உயர்தனிச் செம்மொழியாம் நம் தமிழ் இலக்கியமென்பது அளப்பரும் சலதி. (சலதி = கடல்) சங்க இலக்கியங்களான அகமும், புறமும் பக்தி இலக்கியங்களும், 96 வகைச் சிற்றிலக்கியங்களும், காப்பியங்களும், குறுங்காப்பியங்களும், சந்தப்பாக்களும் இன்றுவரை வந்து கொண்டிருக்கும் புதுப்புது யாப்புக்களும் தமிழைக் காலம்தோறும் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றன.

அதற்காகப் பழைய காப்பியங்களின் புகழ் மங்கி விடுமா? மறைந்து விடுமா ! தமிழகத்தில் கம்பனுக்கு ஊர் ஊர் தோறும் கழகங்கள் தோன்றிக் கம்பராமாயணத்தை மக்கள் படிக்க, சுவைக்க, இராமபக்தியில் திளைக்க வழிவகை செய்து வருகின்றன. சிலம்புக்கு ஆங்காங்கே சில விழாக்கள் நடக்கின்றன. சேக்கிழார் மன்றங்கள் பெரிய புராணத்தைப் பரப்புகின்றன. ஆனால், முருகன் ஆலயங்களில் கூட, அருணகிரிநாதசுவாமிகளின் திருப்புகழ் பேசப்படும் அளவுக்குக் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்த புராணம் அதிகமாக எடுத்தாளப்படுவதில்லை என்பது உண்மை. கச்சியப்பரின் கந்த புராணத்தைக் கம்பராமாயணத்தோடு ஒப்பிட்டு ஆய்வு செய்தவள் நான் என்பதால் கச்சியப்பரை, அவரது கவிநயத்தை நினைவூட்டுவது என் கடமை.

திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்தபுராணம் மூன்றும் சைவர்களால் சிவபெருமானின் மூன்று கண்கள் எனப் போற்றப்படுபவை.

காலம்

தமிழ்ப்புலவர் அகராதியின்படி கச்சியப்பர் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டின் இறுதியும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் என்கிறது. திருப்பனந்தாள் மடத்து வெளியீட்டில் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு என்ற குறிப்புள்ளது. வரலாற்று அறிஞர் நீலகண்டசாஸ்திரியார் கி.பி. 1625 இல் கந்தபுராணம் பாடப்பெற்றது

என்கிறார். 'வீரசோழியம்' புத்தமித்திரரால் இயற்றப் பெற்ற காலத்திற்குப் பிந்தியது கந்தபுராணம். அருணகிரிநாதருக்கு முந்தியவர் கச்சியப்பர். ஆகவே 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கொள்வதில் தவறில்லை.

காஞ்சி அறிஞர்களுக்கும், கோவில்களுக்கும், கலைகளுக்கும் இருப்பிடமான திருநகரம். அங்குக் குமரக் கோட்டமான முருகன் ஆலய சிவாச்சாரியார் காளத்தியப்பரின் திருமகனார் கச்சியப்பர்.

சரித நாயகனே சரிபார்த்த கதை

தில்லைக்கூத்தனே படி எடுத்துக் கொண்ட நூல் திருவாசகம். சரித நாயகன் இராமனே கேட்டு மகிழ்ந்த நூல் இராமாவதாரம். மனிதனைத் தெய்வமாக்கத் தெய்வப் புலவனாக வள்ளுவர் வந்து தந்தது திருக்குறள். இப்படி ஒவ்வொரு நூலுக்கும் ஒரு பெருமை உண்டு.

முருகனே அடி எடுத்துத் 'திகட சக்கர' எனக் கொடுத்துப் பாடவைத்த நூல் கந்தபுராணம். அன்றாடம் பாடல் எழுதிய ஏட்டை முருகன் பாதத் தடியில் வைத்துவிட்டு, மறுநாள் திருக்கதவம்தாள் நீக்கி இறைவன் பாதத்திலிருந்து ஏட்டை எடுத்தால், திருத்தம் செய்யப்பட்டிருக்குமாம். சரிதநாயகனே சரிபார்த்து இந்த நூலைப் புனிதமாக்கியுள்ளான். 10,345 பாக்களால் ஆன நூலை 104 நாள்களில் எழுதினாராம், தெய்வத்தொண்டர் கச்சியப்பர்.

'திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கரவின் மணியா உறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

இது விநாயகர் காப்பு. முதல் பாடல் இது. நூலைக் கச்சியப்பர் அரங்கேற்றியபோது, ஒரு புலவர் குறுக்கிட்டு 'திகழ்-தசக்கரம்' என்று பிரித்துப் பொருள் சொன்னீர்களே ! அதற்கு இலக்கண விதி என்ன?' என எதிர்த்தார். 'முருகன் தந்த முதலடி என்றார் கச்சியப்பர். 'முருகனே பதில் தருவாரா?' என்றார் அந்தப் புலவர். அவை கலைந்தது. கச்சியப்பர் மனம் குலைந்தது. 'சங்கத் தமிழின் தலைமைப்புலவா நீ கொடுத்த தமிழா தவறாகும்?' என்றார்.

மறுநாள் அவை கூடியது. 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற் கனகக் கிழி தருமிக்கு அருளிய சிவனார் மகன், ஒரு புலவராக அவைக்குவந்து, வீர சோழியம் - சந்திப்படலம் - 15ஆவது நூற்பாவை எடுத்துக்காட்டினார்.

'பதினைந்தோடு எண்ணிரண்டாய்த்
தோன்றும் உடம்பின் தகாரம் வரின்
இரண்டும் தொடர்பால் ஆன்ற ஐந்தாம் உடலாம்
முன்பில் ஒற்றுக்கு அழிவு முண்டே'

ழ, ள (15, 16 ஆவது மெய்கள்) ஐந்தாம் உடல் ஆன 'ட' ஆகும் என்பது பொருள்.

இவ்விளக்கம் கேட்ட வினா எழுப்பிய புலவர் வருந்தி 'அரங்கேற்ற விடாமல் குரங்காட்டம் ஆடிய என்னை மன்னிப்பீர்' என்று சொல்ல, வந்த புலவர் மறைந்து விட்டார்.

வாழ்த்து

இன்று திருமுறைகள், பஞ்ச புராணம், பாடி முடித்த பின் வாழ்த்தாகத் தமிழ்நாட்டு ஆலயங்களில் பாடப்பெறும் 'வான்முகில் வழாது பெய்க' பாடல் கச்சியப்பர் தந்த நல்வாழ்த்துப்பா என்பது சிலர் அறியாமலிருக்கலாம். 'நீரின்றமையாது உலகு' 'நீருண்டு - அதைப் பொழிகின்ற கார் உண்டு அவை பொழிந்தால் தான் விளைகின்ற நிலனும் அதன் பலனும் உண்டு' இது வள்ளற் பெருமானின் அழகிய தெய்வமணி மாலைப் பாடலின் பொருள்.

வளமில்லாத பாலையில் மக்கள் உயிர்வாழ முடியுமா? வள்ளுவர் கடவுள் வாழ்த்திற்கு அடுத்த அதிகாரமே 'வான்சிறப்பு' என்றுதானே வைத்தார். கச்சியப்பரும் முதலில் 'வான்முகில் வழாது பெய்க' என்றார். மழை நீர் வளத்தால், நீர் உயர நெல் உயரும் நெல் உயரக் குடிஉயரும். குடிஉயரக் கோன் உயர்வான் அன்றோ? 'மலிவளம் சுரக்க' என வாழ்த்தினார். எங்கே மழை பெய்யும். மாதர் கற்பும் - மழையின் வளமும் காவலன் முறை தவறிய நாட்டில் தவறும். ஆகவே 'மன்னன் கோல் முறை அரசு செய்க' என்று அடுத்த அடி தந்தார். மக்கள் பதினாறு பேறுகளும் பெற்றுக் குறை ஒன்றுமில்லா நிறை வாழ்வு வாழ வேண்டும். 'குறைவிலாதுயிர்கள் வாழ்க' - உயிர்கள் என்று நம் சிவாச்சாரியார் பாடுவது நினைந்தின்புறத் தக்கது. 'பூமண்டலத்தில், சார்ந்த பல்லுயிரெலாம் இன்புற்ற வாழ்க' என்ற பாரதியின் ஆன்ம நேயம், வள்ளற் பெருமானின் உயிரிரக்கம்! எல்லா உயிர்களும் இன்புற்று வாழப் பிரார்த்திக்கும் உயரிய நிலை ! வேத நெறி தழைத் தோங்க வேண்டும் 'நான்மறை அறங்கள் ஓங்க!' வேதம் எந்த எந்த நற் செயல்களைச் செய்ய வேண்டும் எவ்வெத்

தீமைகளை விலக்க வேண்டும் என்று கூறுகிறது. நன்மார்க்கத்தில் மக்கள் வாழ வேண்டும்' நல்தவம் வேள்வி மல்க' தவ ஒழுக்கம் - வேள்விகள் நடைபெற வேண்டும். 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம் என வாழ்த்தை நிறைவு செய்கிறார். சைவம் - மங்களம் நன்மை. உயிரிரக்கம் அனைத்தையும் குறிக்கும் மதம் என்றோ, சமயம் என்றோ கூறாமல் 'நீதி என்றார் கச்சியப்பர். சைவம் நீ செய்த நன்மைக்கும் தீர்ப்பு, பிறவி உண்டு. தீமைக்கும் தண்டனை. பிறவி உண்டு. இருவினை ஒப்பு, மலபரிபாகம் பெற்ற பின் பிறப்புக் கிடையாது என்கிறது. இது தான் நீதி. அந்தச் சைவநீதி உலகத்தில் பெரும்பாலானவர். ஒப்புக்கொண்ட சித்தாந்தம். அது உலகில் நின்று நிலவட்டும்' என்ற உயர்ந்த வாழ்த்து இது.

II கச்சியப்பரின் கவிநயம்

பேரா.முனைவர். சரசுவதி இராமநாதன்

முந்தைய தமிழ் நூல்களில் கடவுள் வாழ்த்து என்று தொடங்கியபின் தான் நூல் பாடப் பெறும். இப்போது அந்த முறை மாறிவருவதை நான் சொல்லி அறியும் நிலை இல்லை ! தொகுத்தவர், சில நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியதும் உண்டு. இயற்கை வாழ்த்து என்றாவது இருக்கும். வள்ளுவரே கடவுளை வாழ்த்திய பின் தான் மற்ற அதிகாரங்களை வகுக்கிறார்.

கச்சியப்பரும் வாழ்த்துகிறார் யாரை? அவரது முழு முதற் பொருளான சிவபெருமானை ! சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான், சத்தியமானவர்; நித்தியமானவன். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியவன். பிறப்பிலி, இறப்பிலி அவன். தாயுமிலா தந்தையிலாதான் தனியன். ஊரிலான் குணம் குறியிலான். பேரிலான், முன்னிலான், பின்னிலான், வேண்டுதல் வேண்டாமையிலான். இன்ப துன்ப மிலான். அவனை வார்த்தைகளால் விவரிக்க முடியுமா ! வேதம் கூட அல்ல ஈது ! அல்லையீது; என அன்மைச் சுட்டினால் குறிக்குமே தவிர இப்படியன் இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று சுட்டிக் காட்ட முடியாதவன் ! அவனுக்கு வாழ்த்தா ? வணக்கம்தான்! பிறவா யாக்கைப் பெரியோன் எனச் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ போற்றிய சிவனை நான்கு அடிகளில் நறுக்கென்று பாடிவிடுகிறார் கந்தனருள் பெற்ற கச்சியப்பர்.

'பிறப்பதும் இறப்பதும், பெயரும் செய்கையும்
மறப்பதும் நினைப்பதும் வடிவம் யாவையும்
துறப்பதும், இன்மையும், பிறவும் சூழ்தலாச்
சிறப்புடை அரனடி சென்னி சேர்த்துவாம்'

எளிய, சிறிய சொற்கள்; பெரிய தத்துவமன்றோ !

'திருஞானசம்பந்தர்' என்றதுமே மதுரைக்கு வந்து பாண்டியனின் வெட்பு நோய் தீர்க்க அவர் பாடிய திருநீற்றுப் பதிகம் (மந்திரமாவதுநீறு; வானவர் மேலதுநீறு) நினைவுக்கு வருமே ! முத்தமிழ் விரகன் எனச் சேக்கிழார் போற்றுவார். சமணர் பிறப்பாலே சமணரா? இல்லை ! சிவனைப் போற்றும் புண்ணியமும், அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் பேறும் இல்லாமல் முன் வினைப் பயனால் சமணர் ஆயினர். பாயை உடுத்திக் கையில் பீலி ஏந்தி வந்தனர் என்கிறார் கச்சியப்பர்.

'பண்டைவல் வினையினால் பாய் உடுத்து உழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்திரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன் மெய்த் தாள்கள் போற்றுவாம்'

நாவுக்கரசர் என்றதுமே கல்லே தெப்பமாக
மிதக்கக் கரையேறினாரே – கற்றுணைப் பூட்டி ஓர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயவே'

என்று பாடினாரே என்று அனைவரும் சொல்வர்.

'பொய்யுரை நூல்சில புகலும் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல் அகத்திடு
வெய்யகல் தோணியாய் மிதப்ப மேற்படு
துய்ய சொல் லரசர் தாள் தொழுது போற்றுவாம்.

என்று வரும் பாடல் அழகு !

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நம்பியாரூரர் தம்பிரான் தோழர், வன்தொண்டர் என்றெல்லாம் போற்றப்படும் சுந்தரர் செந்தமிழால் அற்புதங்கள் பல நிகழ்த்தினார். அவிநாசியில் முதலையுண்ட பாலனை அழைத்தது ஒரு பேரதிசயம்.

'உரைப்பார் உரைஉகந்து உள்கவல்லார்
தங்கள் உச்சியாய்
அரைக்காடரவா - ஆதியும் அந்தமும் ஆகினாய்
புரைக்காடு சோலைப் புக்கெளியூர் அவிநாசியே !
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே !

என ஆணையிட்டுப் பாடினார்.

ஞானசம்பந்தர் திருமயிலையில் எலும்பும் சாம்பலுமாயிருந்தவளைப் பூம்பாவையை, உயிருடன் எழுப்பினார். அங்காவது எலும்பும் சாம்பலுமிருந்தன; பூம்பாவையை அதிலிருந்து எழுப்பினார் சம்பந்தர். இங்கோ குளத்தில் நீரேயில்லை. நீர் எங்கே - அதில் முதலை எங்கே - அது என்றோ உண்டு விழுங்கிய பாலன் எங்கே சுந்தரர் காலனுக்கும், கால காலனுக்கும் ஆணையிட்டார்.

வறண்டு கிடக்கும் குளத்திலே தண்ணீர் நிறைய வர வேண்டும். மடை வழியே முதலை வரவேண்டும். அது கரைக்கு வரவேண்டும். வாயைத் திறக்க வேண்டும். முன்பு அது விழுங்கிய சிறுவனைக் கக்கித் தரவேண்டும். அதுவும் இத்தனைக நாளின் வளர்ச்சி கொண்டவனாகத் தர வேண்டும். இது சுந்தரரின் ஆணை ! இந்தப் பெரிய வரலாறு 4 வரிக்குள் அடங்குமா? கச்சியப்பர் அடக்கிப் பாடி விட்டாரே !

'வறந்திடு பொய்கைமுன் நிரம்ப மற்றுஅவண்
உறைந்திடு முதலைவந்து உதிப்ப அன்னதால்
இறந்திடு மகன்வளர்ந்து எய்தப் பாடலொன்று
அறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம் !'

என்ன அழகு ! எத்தனை சொற் செட்டு !

கண்ணப்பரும் மழையும்

மழை ஒன்று. ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு மாதிரி மழை பொழியும். வட இந்தியாவில் அடை மழையாய்க் கொட்டி வெள்ளம் பெருக்காகும். வேண்டிய இடத்தில் பெய்யாது. சென்னையில் தாம்பரம் பகுதியில் இடியுடன் கூடிய மழை என்று தொலைக்காட்சியில் பார்க்கும் பல்லாவரம் நேயர் கொட்டும் வியர்வையில் நனைந்து கொண்டிருப்பார். இந்த மழை என்றும் காண இனியது. நனைய இனியது.

அது தரும் குளிர்ச்சி இனியது. ஒரு நாள் மழை பெய்தது எங்கள் பள்ளத்தூரில். பால்காரரிடம் இன்று மழை எப்படி? என்றேன். வானம் கறந்து தள்ளி விட்டது என்றார் பால்காரர். வண்ணாரிடம் இதே கேள்வி கேட்ட போது வந்த பதில் அடிச்சுக் கொட்டி வெளுத்திடுச்சம்மா என்பது, வாத்தியார் சொன்ன பதிலோ அடிச்சுப் பின்னி எடுத்திடுச்சு ! கட்சிக்காரரோ என் தலைவர் பேச்சு மாதிரிக் கொட்டிடுத்து' என்றார். பெய்த மழை ஒன்றே பலப்பல கற்பனை. உவமைகளைத் தூண்டி விட்டது. பக்தர் ஒருவர் வயலில் இருபுறமும் அறுவடைக்குத் தயாராக முற்றித்தலை சாய்ந்திருக்கும் கதிர்களைப் பார்த்தால் 'ஆகா ! பக்தர் ஒருவரை ஒருவர் வணங்குகிறமாதிரிப் பயிர்களின் கதிர் சாய்ந்துள்ளது' என்பர். காதற்கவிதை பாடுபவரோ 'வளர்ந்து விட்ட பருவ மங்கை நாணித்தலை சாய்வது போலச் சாய்ந்துள்ளது' என்பார். நீதி போதனை செய்ய வந்தவரோ செல்வம் சேர்ந்தாலும் நல்லவர் பணிவுடன் இருப்பது போல் முற்றிய கதிர்கள் தரையைப் பார்த்துச் சாய்ந்துள்ளன என்பார். அதெல்லாம் சரி, மழைக்கும் கண்ணப்பருக்கும் என்ன முடிச்சு - என்கிறீர்களா? போட்டுக்காட்டுவது கச்சியப்பரல்லவா?

மழை - வானவில் எனும் இந்திர வில்லுடன் கரிய முகில் தோன்றுகிறது. இது

கண்ணப்பர் - கரிய வேட்டு வத்திருமேனியுடன் தோளில், வேட்டைக்குரிய வில்லுடன் தோன்றுவது போல இருக்கிறதாம்

மலை - சிவலிங்கம் மாதிரித் தெரிகிறதாம்.

மழை மலை முகட்டில் பெய்வது, திண்ணனார் காளத்தியப்பருக்குத் திருமஞ்சனமாட்டுவது போலுள்ளதாம்.

'பூட்டு கார்முகம் தன்னொடும் தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங்கிரி மிசை உகுத்தல்
வேட்டுவக் குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்கு
ஆட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே''

❋ ❋ ❋

இந்தியா, சீனா இடையே 3 ஒப்பந்தங்கள் கையெழுத்து

ஷாங்காய், மே 31: இந்தியா, சீனா இடையிலான வர்த்தகத்தை வலுப்படுத்தும் வகையில் மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இந்தியா, சீனா இடையே தூதரக உறவு தொடங்கி 60 ஆண்டகள் நிறைவடைகிறது. இதைக் கொண்டாடும் வகையில் இந்திய குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். சீன அதிபர், பிரதமர் ஆகியோருடன் பேச்சு நடத்திய அவர் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது, வர்த்தகத்தை அதிகரிப்பது உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினார். இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தைப் பெற்றுத் தருவதற்கு சீனா ஆதரவு தர வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் வைத்துள்ளார்.

விப்ரோ நிறுவனம், ஹைட்ராலிக் சிலிண்டர் தயாரிப்பு ஆலை அமைக்க ஒப்பந்தம் செய்துள்ளது. சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சாங்ஸூ நகரில் இந்த ஆலை அமைகிறது. இதற்கான ஒப்பந்தத்தில் விப்ரோ நிறுவனத்தின் சர்வதேச பிரிவுத் தலைவர் ஹரீஷ் ஜே ஷா மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஷென்-ரூய்கிங் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

உயர் அழுத்த ஹைட்ராலிக் கலன் தயாரிப்பு ஆலை மற்றும் ஆராய்ச்சி, மேம்பாட்டு வசதியும் இங்கு அமைக்கப்படும். இன்ஃபோஸிஸ் நிறுவனம் ஜியாக்ஸிங் பகுதியில் ஒரு கல்வி மையத்தை அமைக்க உள்ளது. இதன்மூலம் 1,000 சீன பொறியியல் மாணவர்களுக்கு சாஃப்ட்வேர் பயிற்சியை இன்ஃபோசிஸ் அளிக்கும்.

இதற்கான ஒப்பந்தத்தில் இன்ஃபோசிஸ் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி ரங்கராஜனும், நான்ஹூ மாவட்ட மேயர் பூங்மியாஹூ ஆகியோர் கையெழுத்திட்டனர். சீனாவின் செப்கோ எலெக்ட்ரிக்

நிறுவனம் இந்தியாவில் அனல் மின் நிலைய விரிவாக்கம் செய்வது தொடர்பான மற்றொரு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஏற்கெனவே இந்நிறுவனம் 350 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி ஆலையை ஒரிஸாவில் அமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. தற்போது கூடுதலாக 1050 மெகாவாட் மின்னுற்பத்தி மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் சீனாவின் செப்கோ எலெக்ட்ரிக் நிறுவனத்தின் தலைவர் வாங்லிங்ஃபாங், ஜிஎம்ஆர்கே எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.வி.வி. ராவ் கையெழுத்திட்டனர். மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் தொடர்பாக ஆராய்ச்சிக்கு தனி இருக்கை ஏற்படுத்த ஃபூடான் பல்கலைக் கழகம் முன்வந்துள்ளது.

இந்தியா - சீனா இடையிலான கலாசாரத்தைப் பரிமாறிக் கொள்ளும் வகையிலான இந்த ஒப்பந்தத்தில் சீனாவுக்கான இந்திய தூதர் எஸ். ஜெய்சங்கரும், ஃபூடான் பல்கலைக் கழகத் தலைவர் யூ லியாங்கும் கையெழுத்திட்டனர். குடியரசுத் தலைவரின் இந்தப் பயணம் திங்கள்கிழமை நிறைவடைந்தது. இவருடன் 50 நிறுவனங்களைச் சேர்ந்த 57 வர்த்தக பிரதிநிதிகள் சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டனர். இருதரப்பு உறவை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு நிறுவனங்கள் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டதோடு, விரிவாக்க நடவடிக்கைக்கான பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டனர்.

சுற்றுப்பயணத்தின் நிறைவு நாளான திங்கள்கிழமை இந்தியா - சீனா வர்த்தக கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் பேசியது : ஆசிய பிராந்தியத்தில் இருபெரும் பொருளாதார நாடுகளான இந்தியா, சீனா இடையிலான வர்த்தகம் மேலும் வலுவடைய இந்த் சுற்றுப் பயணம் உதவிகரமாக அமைந்தது. சீன நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில் இந்திய நிறுவனங்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

அப்போதுதான் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிக்கும் என்றார். இந்தியாவில் சீன நிறுவனங்கள் முதலீடு செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 May 2010

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

இரா. அழகுமலை	**முனைவர் க. சின்னப்பா**	**இரா. குருசாமி**
செயலாளர்	முதல்வர்	செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்	செந்தமிழ்க் கல்லூரி	செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை – 625 001

From

SECRETARY

Madurai Tamilsangam

Madurai - 625 001

TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.